# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 8
செய்தி 5
நவம்பர் 2021
விலை ரூ 10/-

## தொழிற் சங்கங்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தாமல் தன்னிச்சையாக 10 சதவீதம் போனஸ் அறிவித்ததை கண்டித்து மாநிலம் முழுவதும் மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் 25.10.2021







பெரம்பலூர் மின்வட்ட கிளை அலுவலகத்தை மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.ராஜேந்திரன் திறந்து வைத்தார் 23.10.2021

# தொழிற் சங்கங்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தாமல் தன்னிச்சையாக 10 சதவீதம் போனஸ் அறிவித்ததை கண்டித்து மாநிலம் முழுவதும் மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

**25.10.2021**





















# மின்கதிர்
## செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**
**நவம்பர் 2021**


**உள்ளே....**


- களவு மெய்ப்பட வேண்டும்
- அரசு போனஸ் அறிவிப்பில் ஏமாற்றம்
- ஓராண்டு நிறைவடையும் போராட்டம்
- மகத்தான நவம்பர் புரட்சி
- கேங்மேன் பணியாளர்கள் மின்வாரியத்தின் கொத்தடிமைகள் அல்ல
- ஒரு லட்சம் விவசாய இணைப்புகள் காலிப்பணியிடங்கள் 52,000
- பாலியல் குற்றச்சாட்டில் செயற் பொறியாளர் இடமாற்றம்
- நிலக்கரியும் அனல் மின்உற்பத்தி நிலையங்களும்
- டிசம்பர் 10ல் 10 நிமிடி போராட்டம்



**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.


# கனவு மெய்ப்பட வேண்டும்!

எந்த அரசு தமிழகத்தில் ஆட்சி பொறுப்பு ஏற்றாலும் அவர்களின் அதிகாரப்பசி உழைப்பாளி மக்களின் மீது திணிப்பதை வழக்கமாகத்தான் கொண்டுள்ளனர். இலவசங்களும், சலுகைகளும், அள்ளி வீசுகின்றனர். ஆனால் ஊழியர்களுக்கோ பறிக்கப்பட்ட உரிமைகளைக்கூட தரமறுக்கின்றனர். தொழிலாளர் நலன் சார்ந்த அரசு, விடியல் அரசு என நாம் வாக்களித்த திமுக அரசு நம்மை புறக்கணிப்பதின் நோக்கம் என்னவோ?

சரண் விடுப்பும், பஞ்சப்படியும்,பறித்த பின்பு போனசைக்கூட விட்டு வைக்கவில்லை. அரசின் திட்டங்களை பாமர மக்களுக்கும் கொண்டு செல்லும் மின்வாரிய பணியாளர்களுக்கு எந்தவித சலுகையையும், பறிக்கப்பட்ட உரிமையையும் தருவதில் காலதாமதம் செய்வது ஏனோ?

பதவி உயர்வுகளும், இடமாறுதல் உத்தரவுகளை முறையாக வெளியிட முடியாமல் அதற்கும் யாருடைய கண் அசைவிற்காக காத்திருக்கிறது என்று புரியவில்லை. கருணை அடிப்படையில் வேலை நியமன உத்தரவை இறந்து போன பணியாளர்களின் வாரிசுகளுக்கு கொடுப்பதிலும் கூட அரசியல் இருக்கிறது.

தொழிற்சங்கங்களை மதிக்காமல் தன்னிச்சையாக போனஸ் அறிவிப்பு செய்தது, தொழிலாளர்களின் உணர்வுகளை உணராத போக்கு இந்த அரசும் செய்கிறது என்பது நம்ப முடியவில்லை.

மின்சார வாரியத்தின் வருவாயில் பெரும்பகுதி மின்சார கொள்முதலுக்கு செலவு செய்கின்ற ஆட்சியாளர்கள் மாற்றத்தைக் கொண்டு வராமல் இருப்பதன் நோக்கம் என்னவோ ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.20-க்கு வாங்குகின்ற நிலைமைக்கு மின்வாரிய நிர்வாகமும், அரசும் சென்றிருப்பது மின்வாரியத்தை மேலும் கடன் சுமைக்கு கொண்டு செல்லும். காலிப்பணி இடங்கள் நிரப்படும் என்ற அறிவிப்புகள் அறிவிப்புகளாகவே வந்த வண்ணம் உள்ளன. அரசின் கேந்திரமான பொதுத்துறையில் 52,000 காலிப்பணி இடங்கள்


இருந்தும் பல ஆண்டுகளாக பணி செய்து வரும் ஒப்பந்த ஊழியர்கள், படித்து பட்டம்,பட்டயம் பெற்ற வேலை இல்லாத இளைஞர்களின் கனவுகளை சிதைத்து வருகிறார்கள். முன்மாதிரியாக இருக்க வேண்டிய அரசின் நிறுவனமே ஒப்பந்த முறையிலும் அவுட்சோர்சிங் முறையிலும் பணிகளை செய்ய சொல்வது சரியா? என தமிழக அரசு சிந்திக்க வேண்டும்!

கடந்த 10 ஆண்டுகளாக மின்வாரியத்தில் ஆட்சியாளர்களால் ஏற்பட்டுள்ள நிலைமையே தொடர வைப்பது. மின்னகத்தில் தொழிற்சங்கங்கள் தந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்ளாமல் புறந்தள்ளுவதும், முந்தைய ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருந்ததாக கருதி அதிகாரிகளை பந்தாடுவதும் பொருத்தமானதல்ல.

மின்வாரிய கட்டமைப்பை வலிமையாக்கி, மின்வாரிய பணியாளர்களின் உரிமைகளை வழங்கி அவர்களின் கோரிக்கைகள் மீது கவனம் செலுத்தி தீர்க்க வேண்டிய தமிழக அரசு பாராமுகமாய் இருப்பதேனோ? மின்சார சட்டத்திருத்த மசோதாவின் அடிப்படையில் மாநில மின்வாரியங்களை கூறுபோட நினைக்கும் ஒன்றிய அரசை எதிர்த்து கொண்டே நமது உரிமைகளை மாநில அரசிடமிருந்து பெறவேண்டியுள்ளது. பொதுத்துறைகளை பாதுகாக்க நவம்பர் 14 முதல் நவம்பர் 31 வரை மாநிலந்தழுவிய பிரச்சார இயக்கம். பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கான டிசம்பர் 10 போராட்டம் என நாம் திட்டமிட்ட இயக்கங்களை அனைத்து பகுதி ஊழியர்களிடமும் பொது மக்களிடமும் கொண்டு செல்வோம். உரிமைகளை பாதுகாப்போம்!

**பாரதி சொன்னது போல நமது “கனவுகள் மெய்ப்பட வேண்டும் “.**

**அதற்கு வர்க்கத்தை இணைப்போம்! தடைகளை உடைப்போம்!**






# தமிழக அரசின் போனஸ் அறிவிப்பு ஏமாற்றமே!

தமிழக அரசின் செய்தி வெளியிட்டு எண் 930 நாள் 23.10.2021 மூலம் தமிழக முதலமைச்சர் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு போனஸ் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு போனஸ் வழங்க உத்தரவிட்டிருந்தார்.

போனஸ் என்பது கொடுபடா ஊதியம் ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு இலாப நஷ்டத்தை பார்த்து போனஸ் கொடுக்கும் நடைமுறை இருந்து வந்தது. அதாவது உற்பத்தியோடு இணைத்தார்கள். பொதுவாக நிறுவனத்தில் லாபம் அடைந்தால் முதலாளிகள் வளர்ச்சி அடைந்தனர். தொழிலாளர்களுக்கு இலாபத்தில் பங்கு என்ற முறையில் போனஸ் வழங்க மறுத்து வந்ததின் விளைவு தான் போனஸ் கோரிய போராட்டங்கள்.

ஆனால் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ள சேவைத்துறைகளான பொதுத்துறைகளை இலாப நட்டக் கணக்கு பார்த்து போனஸ் வழங்குவது எந்த விதத்திலும் பொருத்தமல்ல. மின்சாரம் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட பொதுத்துறைகளில் அரசு அறிவிக்கும் இலவச சலுகைகளால் ஏற்படும் நிதிச்சுமையை மாநில அரசு இந்த நிறுவனங்களுக்கு முறையே வழங்கியிருந்தால் இந்த துறைகள் கடன் சுமையிலிருந்து தப்பித்து இருக்கும்.

மின்வாரியத்தில் உற்பத்தி திட்டங்கள் நிர்ணயித்த காலத்தை விட பணிகள் முடிக்காமல் இருந்ததாலும், மின்சார கொள்முதலில் அதிகப் படியான விலை கொடுத்து வாங்கியதாலும், தரமற்ற தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்ததினால் நஷ்டம் ஏற்பட்டதே ஒழிய ஊழியர்கள் காரண மல்ல. 52,000-க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்கள் இருந்தும் கடந்த 18 மாதங்களாக கொடிய கொரானாநோய் தொற்று காலத்திலும் கூட 24 X 7 மணி நேரம் பணியாற்றி தடையில்லா மின்சாரத்தை வழங்கி பொது முடக்கத்துக்கு பெரிதும் உதவி செய்தவர்கள் மின்வாரிய பணியாளர்களே!

முந்தைய அதிமுக அரசினால் நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதை சரி செய்வதற்கு பதிலாக அவர்கள் எந்த பாணியை கையாண்டார்களோ அதே பாணியில் இந்த அரசும் கையாளுவது நம்பி வாக்களித்த தொழிலாளர்களுக்கு செய்யும் துரோகமாகும்.

ஆட்சிக்கு வருவதற்கு முன் கடந்த ஆண்டு அதிமுக அரசால் பஞ்சப்படி, சரண்விடுப்பு, போனஸ் மறுக்கப்பட்ட பொழுது அன்று நியாயத்தின் பக்கம் நின்று வீரவசனம் பேசியவர்கள் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த பின்பு அதை மறுப்பது நம்பி வாக்களித்த தொழிலாளர்களுக்கு செய்யும் துரோகமல்லவா?

கொரானா காலத்தில் முழுச்சம்பளத்தை கொடுத்தோம் என்று அறிக்கை விடுவது அழகல்ல. மின்வாரிய பணியாளர்களை முன்களப் பணியாளராக அறிவிக்க கூட மனம் இல்லாத அரசாக இருப்பது நியாயம் அல்ல.

2020-21 ஆண்டின் மின்வாரியத்தின் மொத்த வருவாய் ரூ. 65,239.13/- கோடி இதில் மின்கட்டணம் மூலம் கிடைத்த வருவாய் ரூ. 45,310.28 கோடி.

மின்சாரத்தை தனியார் முதலாளிகளிடம் அதிக விலைக்கு கொள்முதல் செய்ததன் மூலம் செலவான தொகை ரூ.42,051.65/- கோடி ஆக மொத்த வருவாயில் 64.45 சதவீதம் மின்சாரத்தை கொள்முதல் செய்ததில் இந்த அரசு செலவு செய்துள்ளது. மொத்த வருவாயில்பணியாளர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் ரூ. 9036.21/- கோடி செலவு செய்துள்ளது. இது மொத்த வருவாயில் 13.85 சதவீதமே.

ஆட்சியாளர்களின் தவறான நடவடிக்கையால் ஏற்பட்ட கடனுக்கான வட்டி ரூ. 11225.43 கோடி அதாவது வருவாயில் 17.20 சதவீதம்.

2020-21 ஆம் ஆண்டின் வாரியத்தின் நிதி நிலையை தொழிற்சங்கங்களுக்கு கொடுத்து தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அதன் பின் அறிவிக்க வேண்டிய மரபினை தொழிலாளர் நல அரசு என்று சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள் மரபுகளை உடைக்க நினைப்பது சரியா? தொழிற்சங்கங்களுடைய கூட்டு பேர உரிமையை பறிப்பது நியாயம் தானா?

தொழிலாளர்கள் கடந்த ஆட்சியில் பெற்ற உரிமைகளை தக்க வைக்க போராடினார்கள். இந்த ஆட்சியிலும் தொடர வேண்டுமா? தொடர்ச்சியாக மக்களுக்கு இலவசங்களையும், சலுகைகளையும் வழங்கி வருகின்ற நிலையில் அது பாராட்டுக்குரிய விஷயமாக இருந்தாலும், வாக்களித்த தொழிலாளர்களின் போராடிப்பெற்ற உரிமையையும், சலுகையையும் இந்த விடியல் அரசு பறிப்பது தொழிலாளர்களின் வாழ்வில் விடியலே வராது என கருத வேண்டியுள்ளது.

தொழிலாளி வர்க்கம் ஒன்று திரண்டால் ஆட்சியாளர்களுக்கு அவர்களுக்கு புரியும் பாஷையில் புரிய வைப்பார்கள் என்பதை தமிழக அரசு உணர வேண்டும்.

**எத்தனை காலம் தான் ஏமாற்றுவார்**
**இந்த நாட்டிலே! நம் நாட்டிலே!**

- எஸ்.இராஜேந்திரன்

## வாழ்க்கை சிறக்க...

தேவையானது தேவையற்றது என்று எதுவும் இல்லை, காலம் அறிந்து
தேடுதல் தேவையானது. காலம் தவறிய தேடுதல் தேவையற்றது.
தோல்வியின் அடையாளம் தயக்கம்!
வெற்றியின் அடையாளம் துணிச்சல்!
துணிந்தவர் தோற்றதில்லை!!
தயங்கியவர் வென்றதில்லை!!
அடைய வேண்டிய இலக்கு எவ்வளவு பெரியது என்பது
முக்கியம் அல்ல - உன் தன்னம்பிக்கையும் துணிச்சலும்
அதைவிட பெரியது என்பது தான் முக்கியம்!
வாழ்க்கையில் ஒன்றைவிட இன்னொன்று சிறந்தது என்று
எண்ணுவதை விட, ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்துவம் இருக்கும்
என்று புரிந்து கொண்டு வாழ்க்கையை இயல்பாக
ஏற்றுக் கொண்டால் வாழ்க்கை சிறக்கும்.



# ஓராண்டு நிறைவடையும் போராட்டம்

**ஜி. சுகுமாறன்**
பொதுச் செயலாளர்
தமிழ்மாநில சிஐடியு

ஓராண்டு நிறையும் போராட்டம். கண்டுகொள்ளாத மோடி அரசு. உலகின் மிக உயர்ந்த ஜனநாயகம் இதுதானா மத்திய அரசு கொண்டுவந்துள்ள மூன்று விவசாய சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தி கடந்த ஓராண்டுகாலமாக ஆயிரக்கணக்கான விவசாயிகள் டெல்லி நுழைவு சாலைகளில் போராடி வருகின்றனர், வரும் நவம்பர் மாதம் 26 ஓராண்டு நிறைவடையப் போகிறது, உலக வரலாற்றில் ஒரு பிரச்சினைக்காக, ஜனநாயக நாட்டில் இவ்வளவு நீடித்த போராட்டம் இருந்திருக்க வாய்ப்பில்லை, கடினமான கல்நெஞ்சம் படைத்த ஆட்சியாளர்களும் இதுபோன்ற தொடர்போராட்டங்களை தீர்வுகாண முயற்சிக்கும், ஆனால் மோடி அரசு உருப்படியான எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை, இந்த ஓராண்டுகாலத்தில் போராட்டக்கார்ர்கள் சந்தித்த இன்னல்கள் ஏராளம்.

டெல்லி, அரியானா, உத்திரப்பிரதேசம் போன்ற மாநில காவல் துறையால் கடும் அச்சுறுத்தல்கள், தாக்குதல்கள், மண்டை உடைப்பு, கைது, சித்திரவதைகள் என துன்புறுத்தல்கள் ஏராளம். இதன் உச்சமாக போராடும் விவசாயிகள் மீது அமைச்சரின் மகன் தனது வாகனத்தை ஏற்றி கொலை வெறியாடியது, இப்படி ஏராளமான சித்திரவதைகளையும் தாங்கி இப்போராட்டம் இன்னும் ஒற்றுமையுடன் முன்னெடுத்து செல்கிறது,

இன்னொரு பக்கம் இந்த ஓராண்டில் இயற்கை சீற்றங்கள் மாறிமாறி வந்தன கடுமையான வெயில். நடுங்கவைக்கும் குளிர். இதுவரை இல்லாத மழை என அனைத்தையும் இவர்கள் தாங்கி போராட்டத் தை மேலும் வலுவாக முன்னெடுத்து செல்கின்றனர்.

**என்ன தயக்கம்**

ஒன்றிய அரசு அவசர அவசரமாக கொண்டுவந்த மூன்று வேளான்மை சட்டங்களும் அமுலானால் விவசாயத்தை நம்பியுள்ள கோடிக்கணக்கான விவசாயிகளும் விவசாய தொழிலாளர்களும் வாழ்வாதாரத்தை இழக்க நேரிடும், விவசாயம் கார்ப்பரேட் கைகளுக்கு போய்விடும். விவசாயம் வளர்ந்த நாடுகள்போல் இப்போதைய நிலை மாறி கம்பனிகளாக மாறிவுடும் ஆகவே இந்த சட்டங்களை அமுலாக்க்க் கூடாது இது எங்களது வாழ்வாதாரப் பிரச்சினை என விவசாயிகள் போராடுகிறார்க்ள், மறுபுறம் காவல் தெய்வங்களான கார்ப்பரேட்களை திருப்திப்படுத்த விவசாயத்தை அவர்களின்

காலடியில்வைத்து பாதபூசை செய்கிறது ஆட்சி யாளர்கள், வாக்களித்த மக்களைப்பற்றியோ. தேசத்தின் நலன்களைப்பற்றி கவலைகொள்ளாத ஆட்சியாக பிஜேபி ஆட்சி உள்ளது.

கடந்த 2020 நவம்பர் 26 இருபது கோடிக்கும் மேல் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து நடத்திய அகில இந்திய வேலை நிறுத்தம், இந்த வேலை நிறுத்த்த்திற்கு ஆதரவாக விவசாயிகள் கரம் நீட்டின்ர், டெல்லியில் பேரணி நடத்துவது என முடிவு செய்தனர், டெல்லியில் பேரணிக்கு தடைவிதித்தால் டெலி நுழைவு சாலையில் விவசாயிகள் ஒன்று கூடினர், அன்றிலிருந்து இன்றுவரை அங்கேயே தங்கினர், எனவே இப்போராட்டம் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக துவங்கியது என்பதை நாம் மனதில் நிறுத்திக்கொண்டு இப்போராட்டம் எத்தனை மாதங்களானாலும் வெற்றிபெறச் செய்யவேண்டிய பொறுப்பு இந்திய தொழிலாளி வர்க்கத்திற்கு உண்டு, எனெவே இப்போராட்டத்தின் ஓராண்டு நிறைவும் இரண்டாம் ஆண்டு துவக்கம் மட்டுமல்ல 2020 நவம்பர் 26 நினைவு கூறும் நாளான நவம்பர் 26 அன்று நாடு முழுவதும் தொழிலபாளர்களை திரட்டி இயக்கங்களுக்கு அகில இந்திய சிஐடியு திட்டமிட்டுள்ளது, அதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் அன்றைய தினம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பங்கேற்கும் சக்திமிக்க ஆர்பாட்டங்களை மாவட்டங்கள் நடத்தவேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது, நமது சகோதர விவசாயிகள் போராட்டத்தை எப்பாடுபட்டேனும் வெற்றிபெறச்செய்வதுதான் இன்றைய முதல் தேவை என்பதை மனதில் இருத்தி பணி யாற்றுவோம்.

**அடுக்கடுக்கான பொய்கள்**

நமது பிரதமர் மோடி அவர்கள் பொய்களை உண்மை போல் சொல்வதில் வல்லவர், கடந்த ஏழாண்டுகளில் எத்தனை பொய்களை சொல்லி மக்களை நம்பவைத்திருக்கிறார், ஆட்சிக்கு வந்த்தும் கறுப்பு பணத்தை எடுத்து ஒவ்வொரு இந்தியனுக்கும் ரூ,15 லட்சம் தருவோம் என்றார், பின் உயர்மதிப்பு நோட்டுக்களை தீவிரவாத அமைப்புக்கள் பயன்படுத்துகிறார்கள், இதை ஒழித்தால் தீவிரவாதம் ஒழிக்க முடியும் என ரூ,1000. 500 நோட்டுக்களை தடைசெய்தனர், பின் ரூ,2000 த்திற்கான நோட்டு அறிமுகப்படுத்தியது, இது மதிப்பிற்குரிய பிரதமரின் பார்வையில் ரூ,1000 த்தை விட ரூ.2000 குறைந்த நோட்டு போலும், பின் ஜிஎஸ்டி வரிவிதிப்பின்போது இது நாட்டின் பொருளாதாரத்தை பெரும‘ளவு உயர்த்தும். ஜிஎஸ்டி அமுலானால் இந்திய நாடு மற்ற நாடுகளுக்கு கடன் கொடுக்க முடியும். அந்த அளவிற்கு நமது பொருளாதாரம் மேலொங்கு என்றனர். இவைகள் ஏதாவது நடந்த்தா எதுவும் நடக்கவில்லை, மாறாக இதற்குமுன் இருந்த்தை விட மோசமான நிலைக்கு வந்துவிட்டது என்பதுதன் உண்மை.

**பெட்ரோல் டீசல் விலை உச்சம்**

விலைகள் மேலும் மேலும் உயர்ந்து விட்டது, விலை உயற்விற்கு ஆதாரமாக இருக்க்கூடிய பெட்ரோல் டீசர் விலை உயர்வு விண்ணை முட்டுகிறது, இதிலும் கூட நமது பிரதமர் சொன்னதை சற்று திரும்பிப் பார்ப்போம், அவர் பாணியில் இனி பெட்ரோல் டீசல் விலையை உலக சந்தையின் விலைக்கேற்ப கம்பனிகள் தீர்மானித்துக்கொள்ளும் என்றார், உலக சந்தையில் கச்சா எண்ணை விலை படு பாதாளத்திற்கு சென்றது, அப்போதும் இந்தியாவில் விலை குறையவில்லை, காரணம் மத்திய அரசு பெட்ரோல். டீசல் மீதான வரியை அதிகரித்துக்கொண்டே போனது, இதன் விளைவு உலக சந்தையில் கச்சா எண்ணை விலை குறைந்தாலும் இந்டிதயாவில் குறையாமல் மத்திய அரசு வரிகளை உயர்த்தி பார்த்துக்கொண்டது, மத்திய அரசு பெட்ரோ்ல் டீசல் மீது விதித்துள்ள வரிகளை திரும்ப பெற்றுக்கொண்டாலே இப்போதைய விலை பாதியாக குறைந்துவிடும், சுண்டைக்காய் கால்பணம் சுமைக்கூலி முக்கால் பணம் என்பார்களே அதேபோன்று பெட்ரோல் டீசல் விலையை விட வரிகள் அதிகம், மாநில அரசுகள் அதன் முயற்சியாக பெட்ரோலுக் தன்னாலான விலையை குறைத்து, அதைக்கூட மக்களால் அனுபவிக்க முடியாமல்

மத்திய அரசு விலையை உயர்த்தியது.

காங்கிரஸ் ஆட்சிகாலத்தில் பெட்ரோல் விலையை சற்று உயர்த்தியதால் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு வாஜ்பாய் அவர்கள் மாட்டுவண்டியில் பாராளுமன்றம் சென்று பெட்ரோல் டீசல் விலை உயர்வை கண்டித்தார், மோடி அவர்களே இப்போது எந்த வண்டியில் சென்றால் பெட்ரோல் டீசல் விலை உயர்வை குரறைப்பீர்கள், சொல்லுங்கடள் மோடி அவர்களே சொல்லுங்கள், பிஜேபி யின் பாராளுமன்ற உறுப்பினர்களும். அமைச்சர்களும் விலை உயர்வை நியாயப்படுத்துவது எரிகிற தீயில் எண்ணை ஊற்றுவதுபோல் உள்ளது, இவைகளுக்கெதிராக அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து தொடர் நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டிய காலம் இது என்பதை நாம் உணர வேண்டும், விலை உயர்விற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டும், எது செய்தாலும் அரசுகள் கண்டுகொள்ளாது என்கிற விரக்தி நிலையை மக்களிடம் இருந்து அகற்றுவோம், மக்கள் சக்தியே மகேசன் சக்தி என்பதை நிரூபித்தாக வேண்டும், எனவே ஒன்றிணைந்த போராட்டங்களை மேலும் மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும், அதன் ஒரு பகுதிதான் டிசம்பர் 10 அன்று அனைத்து வண்டிகளும் ஆங்காங்கே பத்து நிமிடம் நிறுத்தும் போராட்டம், இப்போராட்டம் நமது ஒற்றுமையை நிரூபிக்கும் போராட்டம், இந்த ஒ'ற்றுமையை வலுப்படுத்துவோம், பத்துநிமிடம் வண்டிகளை ஆங்காங்கே நிறுத்தி அரசுக்கு எச்சரிக்கை மணி அடிப்போடம், இதிலிருந்தும் அரசு தனது கொள்கைகளை மாற்றிக்கொள்ளவில்லை எனில் மேலும் ஒன்றுபட்டு போராடுவோம், நமக்கான அரசை உருவாக்குவோம், அதுவே தீர்வதாக்கு வோம்.




## தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் அடையார் கோட்ட மாநாடு

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சென்னை தெற்கு கிளை -2க்கு உட்பட்ட அடையாறு கோட்டத்தின் 16வது மாநாடு 22.10.2021 அன்று மாலை தரமணியில் நடைபெற்றது. இதில் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன், மண்டல செயலாளர் தோழர் ஏ. முருகானந்தம், கிளைச்செயலாளர் தோழர் டி.அன்பழகன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டு தலைவராக தோழர் ஆர்.பாபு, செயலாளராக எம்.தண்டபாணி, மற்றும் தோழர்கள் சிவாநந்தம், சபாபதி முத்து, ஞான மூர்த்தி (கேங்மேன்) வி.பரத்குமார், என். ராஜா பி. அன்பழகன், எ.கஸ்பர்தாஸ், ஜெ.மாரி(கேங்மேன்) ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

மின் கதிர் வளர்ச்சி நிதியாக ரூ. 2500/- அயனாவரம் பள்ளி நிதியாக ரூ. 2500/- அளித்தனர்.



# மகத்தான நவம்பர் புரட்சி

இருபதாம் நூற்றாண்டு உலகில் அதிமுக்கியமான மாற்றங்களை கண்டது உலகின் மகத்தான புரட்சியாளர் மாமேதை லெனின் தலைமையில் 1917ல் நடந்த அக்டோபர் சோசலிச புரட்சி என்று அழைக்கப்படும் நவம்பர் 7 புரட்சியாகும். புரட்சி முடிந்து குறுகிய காலத்துலேயே உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி உலகமே மூக்கில் விரல் வைக்க செய்தது சோவியத்யூனியன்இ 300 ஆண்டுகளாக முதலாளித்துவம் சாதிக்க முடியாததை முப்பதே ஆண்டுகளில் சாதித்தது சோசலிச சோவியத் யூனியன். இரண்டாம் உலகப் போரின் போது பாசிசம் முறியடிக்கப்பட்டதானது மிகப்பெரிய நிகழ்வாகும். இதில் சோவியத் யூனியன் முக்கிய பங்காற்றியது. 1945ல் செஞ்சேனை பாசிச சக்தியை அடியோடு முறியடித்து புதிய சகாப்தம் படைத்தது.

சோவியத் யூனியன் என்ற கலங்கரை விளக்க வெளிச்சம் புவியெங்கும் பாய்ந்தது. வரலாற்று சிறப்புமிக்க சீனப்புரட்சி. தொடர்ந்து வியட்நாம், கொரியா, கியூபா, ஆகிய நாடுகளில் புரட்சிகர சக்திகளின் வெற்றிஇ கிழக்கு ஐரோப்பாவில் சோசலிச அரசுகள் நிறுவப்பட்டவை போன்றவையெல்லாம் ஏகாதிபத்தியத்திற்கும் சோசலிசத்திற்கும் நடந்த பிரம்மாண்டமான மோதலின் விளைவு ஆகும். இச்சமயத்தில்தான் இந்தியா உள்ளிட்ட காலனி நாடுகள் தேசிய விடுதலை இயக்கங்களை நடத்தி அரசியல் விடுதலை பெற்றன. மார்க்சிய-லெனினிய கோட்பாடுகள் அறிவித்தபடி இந்த வெற்றிகள் உலக வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சோவியத் யூனியன் அமைக்கப்பட்ட பிறகுதான்இ மனிதகுல வரலாற்றிலேயே முதன் முறையாக உழைக்கும் மக்கள் வர்க்கம் சுரண்டலற்ற ஒரு சமூகத்தில் வாழ்ந்தனர். வேகமான தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. அறிவியல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட அபார வளர்ச்சி மனிதகுல முன்னேற்றத்திற்கான மிகப்பெரிய வாய்ப்பு வாசல்களை திறந்துவிட்டன. நிலபிரபுத்துவத்தின் மிச்ச சொச்சங்கள் ஒழிக்கப்பட்டன. பொருளாதாரம்இ பண்பாடு மற்றும் அறிவியல் ஆகிய துறைகளில் அனைத்து துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியால் பெரும் பகுதி மக்களுக்கு ஒரு புதிய வாழ்க்கை கிடைத்தது. உழைக்கும் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. வறுமை-கல்லாமை ஒழிக்கப்பட்டது. வேலையின்மை போக்கப்பட்டது. சுகாதாரம்இ கல்விஇ வீட்டுவசதி ஆகிய துறைகளில் விரிவான சமூக பாதுகாப்பு வலை உருவாக்கப்பட்டது. சோவியத் யூனியனின் இத்தகைய சாதனைகள் முதலாளித்துவ நாடுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

உழைக்கும் மக்களின் உரிமைகளும் பாதுகாப்பும் உத்தரவாதம் செய்யப்பட்டது. சோவியத் யூனியனின் அரசியல் கொள்கையை எதிர்த்தோர் கூட இந்த உண்மையை ஒப்புக்கொண்டனர். புரட்சியின் மூலம் பெற்ற பலன்களைத் தட்டிப்பறிக்க முயற்சி நடந்தபோது 2 கோடி சோவியத் மக்கள் உயிர்த்தியாகம் புரிந்து அதனைக் காத்தார்கள். சாமான்ய மக்களின் உரிமைகள் மனித உரிமை சாசனத்தில் இடம் பெற்றன. பின்தங்கிய நாடுகளுக்கும் பெருமளவிற்கு தொழில் நுட்ப உதவியை செய்தது. சோவியத் யூனியன்தான். எந்த பிரதிபலனையும் அந்த நாடு எதிர்பார்த்ததில்லை. அப்படி

பலனடைந்த நாடுகளில் நமது நாடும் ஒன்று. பஞ்சமும்-பட்டினியும் இன்றி உழைப்பாளிகளான ஆண்களும் பெண்களும் சமஉரிமையோடு வாழமுடியும்மென்பதை உறுதிப்படுத்தியது நவம்பர் புரட்சி.

**தற்காலிக பின்னடைவு**

சோசலிச கோட்பாடுகளை உணர்ந்து செய்ய வேண்டியதை செய்ய தவறியதின் விளைவு 1987க்கு பிறகு சோசலிச சோவியத் யூனியன் சிதறிவிட்டது. இதனால் சோசலிச இயக்கங்களுக்கு தற்காலிக பின்னடைவு ஏற்பட்டது. சமூகத்தில் சோசலிச ஜனநாயகத்தை ஆழப்படுத்த தவறியமை அதிகாரவர்க்க மனோபாவத்தின் வளர்ச்சிஇ தத்துவார்த்த உணர்வு நிலையில் ஏற்பட்ட சிதைவு போன்றவற்றால் இத்தகைய தவறுகள் நேர்ந்தன. சோசலிசத்தை சீர்குலைக்க ஏகாதிபத்தியம் எடுத்துவந்த முயற்சிக்கு இந்த தவறுகள் உதவின. இதனை பயன்படுத்தி முதலாளித்துவம் வென்றுவிட்டது என மாயத்தோற்றத்தை சர்வதேச அளவில் திட்டமிட்டு பொய்ப்பிரச்சாரம் முதலாளித்துவ சக்திகளால் பரப்பப்பட்டது. இது தற்காலிக பின்னடைவே தவிர தொழிலாளி வர்க்கம் மீண்டும் தன்னை புனரமைத்துக் கொண்டு எழும் என்பதை பல்வேறு சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

முதலாளித்துவத்தால் மனித குலத்தின் பிரச்சனைகளுக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது. 2008ல் ஏற்பட்ட உலக பொருளாதார நெருக்கடி அதன் சுமைகள் முழுவதும் வளர்முக நாடுகளின் மீது திணிக்கப்படுவதை காண்கிறோம். இதற்கு அவர்கள் வைத்துள்ள நாகரீகமான பெயர்தான் நவீனதாராளமயம். இந்தியாவில் கடந்த 7 ஆண்டுகளாக கடைந்தெடுத்த வலதுசாரி கூட்டம் ஆட்சியில் அமர்ந்துள்ளது. இக்கூட்டம் தேசத்தையே விற்க துணிந்துள்ளது. ஒன்றிய மோடி அரசு மதவாத சக்திகளை குஷிப்படுத்தும் வகையில் ஆர்.எஸ்.எஸ்ன் அஜெண்டாவை வேகமாக அமலாக்க முயற்சித்து வருகிறது. மோடி அரசு கார்ப்பரேட் நலன்களை பாதுகாக்கவே அவதாரமெடுத்துள்ளதாக கருதுகிறது. இந்திய பொருளாதாரத்தின் நாடி நரம்பாக உள்ள லாபமீட்டக்கூடிய ரயில்வே, காப்பீடு, உருக்கு, எண்ணெய் நிறுவனங்கள், சுரங்கங்கள் அனைத்தும் தனியாருக்கு தாரை வார்ப்பதோடு தேசபாதுகாப்பிற்கே அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பாதுகாப்புதுறை, 41ராணுவ தளவாட தொழிற்சாலைகளை 7 கார்ப்பரேஷன் நிறுவனங்களாக மாற்றி தனியாருக்கு விற்க முயற்சி.

நம்முடைய செல்வத்தைஇ இயற்கைவளத்தை பன்னாட்டு நிறுவனங்கள் சூறையாட அனுமதிஇ மேலும் பன்னாட்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் வேளாண் தொழிலை சிதைப்பதுஇ போராடும் விவசாயிகள் மீது கண்முடித்தனமாக தாக்குவதுஇ கார் ஏற்றி கொல்வது போன்ற ஈனச் செயல்களில் ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளது. தற்போது உலகம் சந்திக்கும் நெருக்கடி மூலம் முதலாளித்துவத்தின் உண்மையான முகமும்இ முதலாளித்துவ அமைப்பு நீடித்துநிற்க முடியாது என்ற உண்மையும் தெரிய தொடங்கிவிட்டது. மார்க்ஸ்-ஏங்கெல்ஸ் அளித்த போதனையை சரியாக புரிந்து கொண்டு முதலாளித்துவத்திற்கு மாற்று சோசலிசமே என்ற முழக்கத்தை ஓங்கி எழுப்பவேண்டியுள்ளது. கடநத் கால அனுபவமும் வெற்றிதோல்வி அனைத்திலும் பெற்றபாடம் ஆகியவற்றின் அடிப்படையில் உழைக்கும் வர்க்கத்துக்கு என்னென்ன உணர்த்தப்பட வேண்டும் என்பதை நவம்பர் புரட்சி நமக்கு நினைகூட்டுகிறது.

சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு ஊடுருவியுள்ள தவறான தத்துவங்களைகளை எடுப்பதும் முறியடிப்பதும் தொழிலாளி வர்க்கத்தின் கடமை. உழைக்கும் வர்க்கத்தின் எதிர்தாக்குதல் இன்றைய காலகட்டத்தின் தேவை. இந்த சவாலை சந்திக்க நம்மை நாமே தயார்படுத்திக் கொள்வோம். வர்க்கப் போராட்ட பதாகையை உயர்த்திப்பிடித்து மகத்தான நவம்பர் புரட்சியை நினைவு கூர்வோம்.

**வி. குமார்.**
உதவிப் பொதுச் செயலாளர்
சிஐடியு தமிழ்மாநிலக்குழு



# கேங்மேன் பணியாளர்கள் மின்வாரியத்தின் கொத்தடிமைகள் அல்ல!

மின்வாரிய வரலாற்றில் நிரந்தர தன்மை வாய்ந்த பணிகளில் மிகவும் குறைந்த கூலிக்கு பணியமர்த்தப்பட்டது இரண்டு முறை. முதலாவது 2005-ம் ஆண்டு ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக நமது முயற்சியின் காரணமாக 37 நாட்கள் தொடர் வேலை நிறுத்தத்தின் காரணமாக முதற்கட்டமாக 8000 பணியாளர்கள் மஸ்தூர் பணியாளர்களாக நியமனம் செய்து பயிற்சிகால தொகுப்பூதியம் ரூ. 2500/-ம், கருணைத்தொகை 15,000 பேருக்கும் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து 10.08.2007-ல் ஒப்பந்தம் காணப்பட்டது. அதில் மஸ்தூர் பயிற்சியாளருக்கு அடிப்படை ஊதியம் ரூ. 2570/- என வழங்கி இரண்டாண்டுகள் பயிற்சி காலம் என நிர்வாகம் ஒப்பந்தத்தை முன் மொழிந்தது. மஸ்தூர் என்ற புதிய பதவியை உருவாக்கியதும், அதற்காக வழங்கப்பட்ட அடிப்படை ஊதியம் மிக, மிக குறைவாக இருந்ததினால் அந்த ஓப்பந்தத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பு கையொப்பமிடவில்லை. தொழிலாளிகளை சுரண்டுவதற்கு சிஐடியு ஒரு போதும் அனுமதிக்காது.

இரண்டாவது முறையாக மார்ச் 2020-ல் கேங்மேன் என்ற புதிய பதவியை உருவாக்கி தொகுப்பூதியமாக ரூ.15,000/- ம் இரண்டாண்டு களுக்கு வழங்குவதும் ஊர் மாற்றம் இல்லை, உள்முகத் தேர்வில் வர இயலாது. களஉதவியாளராக வரமுடியாது என்ற புதிய வாரிய உத்தரவானது ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்தத்திற்கு எதிரானது.

பயிற்சி காலம் மூன்று மாதங்கள், குறைந்தபட்ச ஊதியம் ரூ.21,000/- இவைகள் எதுவும் பின்பற்றப்படாத நிலையில் நாம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தோம். இது அனைவரும் அறிந்ததே. 17.10.2021 அன்று கேங்மேன் பணியாளர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி இணைய ( ZOOM ) வழியாக நடத்தினோம். நாம் வழக்கில் சொல்லப்பட்ட விஷயங்களைத்தான் இணைய வழிக்கூட்டத்தில் கேங்மேன் பணியாளர்கள் தங்களது கோரிக்கைகளாக குறைகளாக எடுத்துரைத்தனர். இவற்றையெல்லாம் மின் ஊழியர் மத்திய அமைப்பு இதயபூர்வமாக உணர்ந்து அவர்களின் கோரிக்கைகளை களைவதற்கான நடவடிக்கையை வட்ட அளவிலும், மண்டல அளவிலும் உறுதியாக எடுப்பார்கள் என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை.

கேங்மேன் பணியாளர்கள் மின்வாரியத்தின் நிரந்தர ஊழியர்கள் இவர்கள் பெற்று வரும் தொகுப்பூதியம் ரூ.15,000/- என்பது 22.02.2018 அன்று ஏற்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது மூன்று மாதம் பயிற்சி காலம் என

ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு இரண்டாண்டுகள் பயிற்சிகாலம், தொகுப்பூதியம் ரூ.15,000/- என வழங்கியது. ஒப்பந்த ஷரத்துக்கு எதிரானது. இதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கான நீதிமன்ற நடவடிக்கையில் விரைவில் துவங்குகிறோம் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறோம். இதுவும் ஒரு வகையான உழைப்புச் சுரண்டல் என்பதை அனைவரும் உணர வேண்டும். உழைப்புச் சுரண்டலுக்கு எதிராக, தொழி லாளிகளுக்கு ஆதரவாக நாம் எப்போதும் வலுவான போராட்டத்தை நடத்தி வந்துள்ளோம் என்பதை அனைவரும் அறிவார்கள்.

கேங்மேன் பணியாளர்கள் நிலையாணை சட்டத்திற்குட்பட்டவர்கள் (STANDING ORDER) எனவே நிலையாணை சட்டத்தில் வரும் அவர்களுக்கு மற்ற தொழிலாளிகள் பெற்றுவரும் அனைத்து சலுகைகளும் உரிமைகளும் இவர் களுக்கும் பொருந்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பயிற்சி காலத்தில் ஈட்டிய விடுப்பு 22 நாட்களுக்கு ஒரு நாள் வழங்கப்பட வேண்டும். உடல்நிலை சரி இல்லாத போது மருத்துவ விடுப்பு வழங்க வேண்டும். பணியின் போது விபத்து ஏற்பட்டால் சிகிச்சை முடிந்து அலுவலகம் திரும்பும் வரை விபத்து விடுப்பு (ACCEDENT LEAVE) வழங்கிட வேண்டும். மருத்துவ காப்பீடு இவர்களுக்கு பொருந்தும் ( HEALTH INSURENCE ) 15 நாட்கள் தற்செயல் விடுப்பு (CASUAL LEAVE ) ஆண்டுக்கு 20 நாட்கள் மாற்று விடுப்பு (C.off) வழங்கிட வேண்டும். ஆண்டுக்கு 2 செட் சீருடை, சைக்கிள் அலவன்ஸ் உட்பட வழங்கிட வேண்டும். இவற்றை எல்லாம் வழங்குவதற்கு பதிலாக நிலையாணை சட்டத்தை படித்து தெரிந்து கொள்ளாமல், வாரியத்தின் பல்வேறு உத்தரவுகளையும் தெரிந்து கொள்ளாமல் மேற்கண்ட உரிமைகளையும், சலுகைகளையும் வழங்க மறுப்பது கோட்ட, திட்ட நிர்வாகத்தின் தவறான புரிதலாகும். இவற்றை நமது சங்க நிர்வாகிகள் உரிய நிர்வாகத்திடம் கொண்டு சென்று உறுதியாக தீர்த்து வைப்பார்கள்.

கேங்மேன் பணியாளர்களோ அல்லது ஒப்பந்த ஊழியரோ எந்த ஊழியராக இருந்தாலும் அவர்களை மனிதனாக மதித்திட வேண்டும். மனித நேயத்துடன் நடத்திட வேண்டும். பொறுப்புகளின் அதிகாரத்தை பயன்படுத்தி தனக்கு கீழே தொழி லாளர்கள், கேங்மேன் பணியாளர்களை தரக் குறைவாக பேசுவது, மனஉளச்சல் ஏற்படும் வகையில் நடந்து கொள்வது, இரவு,பகல் பாராமல் கொத்தடிமைபோல் வேலை வாங்குவது. இரவு 10 மணிக்கு மேல் மின் கம்பத்தில் ஏறி பணி செய்யச் சொல்வது ஏற்க முடியாது. இதை மின் ஊழியர் மத்திய அமைப்பு வன்மையாக கண்டிப்பதோடு, இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் உரிய அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு பிரச்சனைகளை தீர்த்து வைப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். சமீபகாலங்களில் களப்பணி ஊழியர்கள் மின் விபத்து ஏற்பட்டு பலத்த காயம் அடைவதும் இறப்பதும் தொடர் கதையாக உள்ளது. பாதுகாப்பு சாதனங்களை பிரிவு பொறியாளர் கட்டாயம் வழங்கிட வேண்டும். பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் எந்த பணியையும் செய்யக் கூடாது. எர்த்ராடு டிச்சார்ஜ் ராடு இல்லாமல் கம்பங்களில், மின் மாற்றிகளில் பணி செய்திடக் கூடாது என்ற முக்கிய விஷயத்தை மனதில் கொண்டு பணி செய்திட வேண்டும்.

கேங்மேன் பணியாளர்கள் மட்டுமல்ல அனைத்து பணியாளர்களும் மதிக்கத்தக்கவர்கள், போற்றத்தக்கவர்கள், களப்பணியில் மின்சாரத்தில் பணி செய்யும் போது கவனமுடன் வேலை செய்து தனது உயிரைக்காத்து மின்வாரிய வளர்ச்சிக்கு பாடுபடுவோம். கேங்மேன் பணியாளர்களின் அனைத்து கோரிக்கைகளையும் படிப்படியாக, விரைவாக தீர்த்து வைப்பதற்கு மின் ஊழியர் மத்திய அமைப்பு தீவிரமாக செயல்படும்.

**பொறுத்திருங்கள், விழித்திருங்கள்,**

**நாளை நமதே!**

**- தி.ஜெயசங்கர்**

---

**நூறு நாள் வேலையை மட்டும் நம்பி 21 கோடி மக்கள்**

இந்தியாவில் பெரும்பாலும் விவசாய தொழிலாளர்களே வறுமையை எதிர்கொள்கின்றனர். நவீன தாராளமய, தனியார்மய கார்ப்பரேட் மயம், புதிய வேளாண் சட்டங்கள் ஆகியவற்றால் விவசாய தொழிலாளர்களின் வறுமை சதவீதம் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் கடந்த ஆண்டு ரூ.130 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு ஒன்றிய அரசு ரூ.75,000/- கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்துள்ளது. ஒரு வேளை உணவுக்கே வழியில்லாத நிலை உருவாகியுள்ளது.



# ஒரு லட்சம் விவசாய மின் இணைப்புகள் காலிப்பணி இடங்கள் 52,000!

தமிழக மின்சார வாரியத்தில் சமீப காலமாக அதிகமான மின் விபத்துக்கள் ஏற்படுகிறது. இதற்கு நிர்வாகம் சொல்லும் காரணம், ஊழியர்கள் சரியாக வேலை செய்யவில்லை என்றும், அதன் காரணமாகவே மின் விபத்துக்களும், மின் தடைகளும் ஏற்படுவதாக சொல்லுகிறது. மின் தடைகளுக்கும், மின் விபத்துக்களுக்கும் உண்மையான காரணம் என்ன என்பதை மறைத்து ஊழியர்கள் மீது திசை திருப்பி மின் நுகர் வோரையும், மின் ஊழியர்களுக்கும், பொறி யாளர்களுக்கும் எதிராக திரட்டுவது தான் இதன் உள்நோக்கமாக உள்ளது என்பதை தொழிற்சங்கங்கள் நன்கு அறியும். இந்த உண்மையை மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

## 52,000 காலிப்பணி இடங்கள்

தொழிற்சங்கங்களோடு ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தப்படி ஆரம்பநிலை காலிப்பணி இடங்களான களஉதவியாளர்/கம்பியாளர், தொழில்நுட்ப உதவியாளர் (TA) , உதவி பொறியாளர் (AE) இளநிலை உதவியாளர் (JA) கணக்கீட்டாளர் (Assessor ) போன்ற பதவிகளில் 35,000-க்கும் மேல் காலிப்பணி இடங்களாக உள்ளது. கூடுதலாக பதவி உயர்வு காலிப்பணி இடங்கள் உயர்வு காலிப்பணி இடங்கள் ( Promotion Post ) 15,000-க்கும் மேல் உள்ளது. இந்நிலையில் களப்பணி ஊழியர்கள் அவசர பராமரிப்பு பணிகள், புதிய மின் இணைப்பு வழங்கல், மின் துண்டிப்பு, இணைப்பு ( DC,RC ) போன்ற பணிகளை செய்வதற்கே பணியாளர்கள் போதவில்லை. இருக்கின்ற குறைவான பணியாளர்கள் இரவு பகல் பாராமல் பணி செய்திட வேண்டியுள்ளது. துணை மின் நிலையம் மற்றும் மின்தடை நீக்கப்பணிகள் உள்ள இடத்தில் பிரிவில் உள்ள பணியாளர்களை வைத்தே பணி செய்திட வேண்டியுள்ளது. இதனால் கூடுதல் வேலை பளுவை சுமந்து பணி செய்யும் ஊழியர் மனஉளச்சலுக்கு உள்ளாகி பணி செய்யும் போது விபத்துக்குள்ளாகின்றனர். இதன் காரணமாகவே காலிப்பணி இடங்களை நிரப்பிட வேண்டுமென்று நாம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம். இது தொடர்பாக சுயேட்சையான இயக்கங் களையும், சில சமயங்களில் கூட்டாகவும் இயக்கங்களை நடத்தி வாரியம் மற்றும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். இந்த நிலையில் வாரியம் ஏற்கனவே அறிவித்த வேலை நியமன அறிவிப்பான ( Notification) களஉதவியாளர் ( FA) 2,900, கணக்கீட்டாளர் (Asser ) 1300 உதவிப்பொறியாளர் (AE ) 575, இளநிலை உதவியாளர் ( Accounts, JA ) 500, போன்ற பதவிகள் கடந்த மூன்றாண்டுகளாக நிரப்பப்படாமல் காலந்தாழ்த்தி வருவதை அனுமதிக்க முடியாது. விபத்துக்களும், உயிரழப்புக்கும் முக்கிய காரணமாக காலிப்பணி இடங்களாக உள்ளதால் அதை நிரப்பிட வேண்டும் என்பதற்கான வலுவான ஒரு இயக்கத்தை நடத்திட வேண்டிய தேவை உள்ளது.

தமிழக அரசு ஒரு லட்சம் விவசாய மின் இணைப்புகள் அடுத்த ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் கொடுக்கப்படும் என்று அறிவித்துள்ளது. இது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். அதே நேரம் இந்த பணிகளை செய்வதற்கான பணியாளர்கள் நம்மிடம் இல்லை, பற்றாக்குறையாக உள்ளது. என்பதை தமிழக அரசு உணர்ந்து காலிப்பணி இடங்களை நிரப்பிட துரித நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்பது நமது

கோரிக்கையாக உள்ளது. மின்சாரத்தில் ஆபத்து நிறைந்த பணியை செய்யும் நமது மின் ஊழியர்கள் மனஉளச்சல் காரணமாக பணியை கூடுதல் பனிச்சுமை காரணமாகவும் விபத்து ஏற்படுகின்றது. திறமையான மிகச்சிறந்த பணியாளர்கள் கூட பணிச்சுமை காரணமாக மன உளைச்சல் ஏற்பட்டு, விபத்துக்குள்ளாகின்றனர். குறிப்பாக புதியதாக பணியேற்ற கேங்மேன் பணியாளர்கள், மின்வாரியத்தில் ஒப்பந்த ஊழியர்களே பணி செய்யவில்லை என்று பொய் சொல்லும் நிர்வாகத்தினால் வேலை வாங்கப்படும் ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் கம்பியாளர்கள் அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதே மத்திய அமைப்பின் கோரிக்கையாகும்.

எதிர்கட்சியாக இருந்த பொழுது மக்களிடம் குறைகளைக்கேட்டு, தொழிலாளர்களிடம் குறைகளை கேட்டு நூறு நாட்களுக்குள் கோரிக்கைகள் நிறைவேற்றுவோம் என்று சொன்ன புதிய ஆட்சியின் முதல்வர், விடியல் ஆட்சியின் முதல்வர், மின்வாரிய ஊழியர்களின் கோரிக் கைகளை நிறைவேற்றுவதில் பழைய ஆட்சி யினுடைய பாதையை பின்பற்றுவதாக நாம் கருத வேண்டியுள்ளது. அதன் ஒரு பகுதி தான் 25.10.2021 போனஸ் ஆர்ப்பாட்டம். சென்ற ஆண்டு தீபாவளி பண்டிகையின் போது 10 சதவீதம் அறிவித்த அதிமுக ஆட்சியின் அறிவிப்பு அப்போது எதிர்கட்சி தலைவராகவும் தற்போதைய முதல்வருமான சொன்னதானது இரவு பகல் பாராமல் உழைக்கும் அரசு ஊழியர்களுக்கு அதிமுக அரசு அறிவித்த 10 சதமானது வேலை செய்யும் ஊழியர்களை மனதளவில் உற்சாகம் இழக்கச் செய்யும் என்று சொன்னார். பணிகளில் தொய்வு ஏற்படும் என்றும் சொன்னார். அதே முதல்வர் தான் இன்று அதிமுக கொடுத்த 10 சதம் போனஸையே விடியல் அரசு அறிவித்துள்ளது என்பதானது திமுக ஆட்சியின் சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வித்தியாசமாக உள்ளதாக தொழிலாளர்கள் உணர்கிறார்கள். கொரானாவை காரணங்காட்டி மின் ஊழியர்களின் சலுகைகளை, அரசு ஊழியர்களின் சலுகைகளை பறிப்பதை இனிமேலும் அரசு ஊழியர்கள் ஏற்க மாட்டார்கள் மின்ஊழியர்களும் ஏற்கமாட்டார்கள்.

அதிகமான காலிப்பணி இடங்களை வைத்துக் கொண்டு, குறைவான ஊழியர்களை வைத்து ஏற்கனவே உள்ள தொடர் வேலைகளையும், ஒரு லட்சம் விவசாய மின் இணைப்புகளை கொடுப்பது என்பது சாத்தியமற்றது. இதை செய்தே தீர வேண்டும் என்று நிர்பந்தம் செய்யும் போது விபத்துகளும், உயிர் இழப்புகளும் ஏற்படுகின்றது. தொடர் மின் விபத்துகள், ஊழியர்கள் மத்தியில் அச்சத்தையும். கோபத்தையும் உருவாக்குகின்றது.வருவது மழைக்காலம், நவம்பர், டிசம்பர் மாதங்களில் அதிகமான மழை பொழிவு தமிழகத்தில் உள்ளது. இதனை சமாளிக்க போதிய அளவு பணியாளர்கள் இல்லை என்பதே எதார்த்தமான உண்மையாகும். அதிகாரிகளின்,பொறியாளர்களின் அழுத்தத்தால் கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டு விபத்து ஏற்பட்டால் தொழிலாளர்கள் தன்னிச்சையாக போராட்டத்தில் இறங்குவார்கள். அந்த போராட்டத்தை மின் ஊழியர் மத்திய அமைப்பு தலைமை ஏற்கும், வழிகாட்டும். எனவே நிர்வாகமும் அரசும் இது போன்ற சூழ்நிலைகள் வராமல் மின் நுகர்வோர்களுக்கு சேவை செய்திட, ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட நிலுவையில் உள்ள புதிய பணி நியமனங்களான களஉதவியாளர், கணக்கீட்டாளர், உதவி பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், இளநிலை உதவியாளர், கேங்மேன் மற்றும் ஒப்பந்த ஊழியர்களை பணிக்கு அமர்த்துவதை தவிர வேறு வழியில்லை, அதை செய்திட வேண்டுமென்பதே மத்திய அமைப்பின் கோரிக்கையும், விருப்பமும் ஆகும்.

- தி.ஜெயசங்கர்

---

## உணவு தானியங்கள் குப்பையிலே!

மத்திய உணவு தானியக்கிடங்கில் உள்ள தானியங்களை ஏழை மக்களுக்கு இலவசமாக வழங்க மோடி அரசு மறுத்து வருகிறது. உணவு பாதுகாப்பு சர்வதேச குறியீட்டில் 113 நாடுகளில் இந்தியா 71 வது இடம். பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் பின்னால் உள்ளோம்.

---

## பெட்ரோல் விலையை உயர்த்தி மக்களிடம் கொள்ளையடிப்பது நியாயமா

மக்களின் வாழ்வாதரமும் பொருளாதாரமும் சிதைந்து போய் உள்ள நிலையில் சென்ற நிதியாண்டில் மட்டும் மோடி அரசாங்கம் பெட்ரோலிய பொருட்கள் மீதான வரிகள் மூலம் 3.61 லட்சம் கோடி கூடுதலாக வசூல் செய்துள்ளது.

## மின்வாரிய தொழிலாளர்களுக்கு 10சதவீதம் போனஸ் தன்னிச்சையாக அறிவித்ததை கண்டித்து 25.10.2021-ல் மாநிலந்தழுவிய ஆர்ப்பாட்டம்!

மின்வாரிய ஊழியர்களுக்கு, தமிழக அரசு தொழிற்சங்கங்களை அழைத்து பேசாமல் தன்னிச்சையாக 10 சதவீத போனஸ் என அறிவித்ததை கண்டித்து மாநிலம் முழுவதும் கண்டன ஆர்பாட்டங்கள் நடைபெற்றன.

சென்னை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கணக்காயர் மற்றும் களத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு.சந்திசேகரன் தலைமை தாங்கினார். திரு.சாமி-டாக்டர் அம்பேத்கர் சங்கம்,திரு.இரத்தினவேலு -கார்டுபில்லிங் யூனியன், திரு.கல்யாணசுந்தரம் - இன்ஜினியர்ஸ் யூனியன், திரு. கார்த்திகேயன்- பொறியாளர் சங்கம், திரு.செல்வராஜ் - ஜனதா, திரு.சேவியர் - ஐஎன்.டி.யூசி. திரு.சேக்கிழார் - எம்ப்ளாயீஸ் பெடரேசன், திரு. சுப்பிரமணியன் - ஐக்கிய சங்கம், மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ். இராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதில் தோழர்கள் மாநில தலைவர் தி.ஜெயசங்கர், துணை பொதுச்செயலாளர் கே.ரவிச்சந்திரன், மாநில துணைத் தலைவர் எம்.சாலட், மத்திய சென்னை கிளை செயலாளர் தோழர் எஸ். கண்ணன், தலைவர் வி. சீனிவாசன், வடக்கு கிளையின் தலைவர் ஜி.மதனகோபால், தோழர் எம். வெங்கட்டையா உள்ளிட்ட நூற்றுக் கணக்கான தோழர்கள் கலந்து கொண்டனர்.

மாநிலம் முழுவதும் 25.10.2021 அன்று அனைத்து பிரிவு அலுவலகங்களிலும், கோட்ட, வட்ட அலுவலகங்கள் முன்பும் அனைத்து சங்க சார்பாக ஆர்ப்பாட்டம் வெற்றிக்கரமாக நடைபெற்றுள்ளது.

---

## பெரம்பலூர் மின் வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்தில் மத்திய அமைப்பு சங்க அலுவலக திறப்பு விழா

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பெரம்பலூர் வட்டம், மேற்பார்வை பொறியாளர் அலுவலக வளாகத்தில் நிர்வாகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட சங்க அலுவலக திறப்பு விழா கடந்த 23.10.2021 அன்று தோழர் அகஸ்டின் மாநில செயலாளர் மற்றும் கிளைத்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கிளைச்செயலாளர் தோழர் பன்னீர்செல்வம் வரவேற்புரையாற்றினார். மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் சங்க அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். மத்திய அமைப்பின் மாநில துணைத்தலைவர் எஸ். இராஜாராமன் மறைந்த முன்னாள் மத்திய அமைப்பின் தலைவர் / பொதுச்செயலாளர் தோழர் எஸ்.பி.ஆர். (எஸ்.பஞ்சரத்னம்) அவர்களின் திருவுருவ படத்தை திறந்து வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தோழர் கே.தனபால், கிளைச்செயலாளர்/கரூர் பொருளாளர் செல்வம், இணைச்செயலாளர் சுப்ரமணியம், புதுக்கோட்டை கிளைச்செயலாளர் தோழர் கே.நடராஜன், தஞ்சை கிளை செயலாளர் தோழர் பி. காணிக்கைராஜ், திருச்சி மாநகர கிளை தோழர் எஸ்.கே.செல்வராஜ், மின்துறை பொறியாளர் அமைப்பின் பெரம்பலூர் கிளையின் வட்டத்துணைத் தலைவர் தோழர் ஜெ.ஆல்பர்ட் அருமைராஜ், மின்வாரிய உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக்குழுவின் கன்வீனர் தோழர் சி.இராஜகுமாரி ஆகியோருடன் சிஐடியு மாவட்டத் தலைவர்களும், மத்திய அமைப்பின் நிர்வாகிகளும் தோழர்களும் கலந்து கொண்டனர். பெரம்பலூர் கிளை பொருளாளர் தோழர் கே.கண்ணன் நன்றி கூறினார்.




# சட்டத்தின்படி நடக்க வேண்டிய பணிகள் லஞ்சம் கொடுத்தால் தான் நடக்கிறதோ ?

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சமீபத்தில் தலைமை நீதிபதி உள்ளிட்ட இருவர் கொண்ட பெஞ்சில் வேலை நடப்பதற்காக லஞ்சம் கொடுத்து குறுக்கு வழியை ஊக்குவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என கருத்து தெரிவித்துள்ளனர்.

தாயின் கருவரையிலிருந்து பூமிக்கு வருவதற்கு கொடுக்க ஆரம்பித்த லஞ்சம் கல்லறையில் அடக்கம் செய்து இறப்புச்சான்றிதழ் வாங்குகின்ற வரை இந்த லஞ்சம் என்னும் பேய் மனிதனை ஆட்டிப்படைக்கிறது. பிறப்பு சான்றிதழ், பள்ளிக்கூடம், கல்லூரி, வேலை வாய்ப்புகள், விரும்புகின்ற இடம் நியாயமாக கிடைக்க வேண்டிய பதவி உயர்வு, பணி இடமாறுதல், பணச்சலுகைகள் பெறுவதற்கு, ஓய்வுகால சலுகை பெறுவதற்கு என முடிவில்லாத இந்த லஞ்சப்பேய்கள் அனைத்து துறைகளிலும் நீக்கமற நிறைந்துள்ளன.

படிப்புக்கு பல லட்சங்களை செலவு செய்து படிக்க வைக்கின்ற பொழுது லஞ்சம் கொடுத்து அரசு துறைகளில் வேலை வாங்குகின்ற போதும், பணியில் சேர்ந்த பொழுது கொடுத்த லஞ்சத்தை முதலீடாக கருதி சாதாரண மக்களைக்கூட விட்டு வைக்காமல் அவர்களது பணியை சட்டபூர்வமாக முடிக்க லஞ்சம் பெறுவதும், தான் பணியாற்றும் துறையின் வளர்ச்சியை கருத்தில் கொள்ளாமல் துறையின் பணிகளில் துரோகம் செய்து லஞ்சத்தைப்பெற்று வாழ வேண்டிய சூழலை ஏற்படுத்தி அதற்கு நியாயம் கற்பிக்கின்ற கொள்ளைக்கூட்டம் உள்ளவரை இது மாறாது.

சாதாரண மக்கள் தங்களது தேவைகளை நாடி வருகின்ற அரசின் துறைகளில் லஞ்சம் கொடுத்து பணிகளை முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனப்து கவலையளிக்கிறது. குற்றம் சாட்டப்பெற்றவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், அரசியல்வாதிகள், அரசு பணியாளர்கள் உட்பட லஞ்சம் கொடுத்து சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள்.

லஞ்ச ஒழிப்புத்துறையால் நேரடியாக பிடிபட்டு கைது செய்யப்பட்டவர்களுக்கு கூட தற்காலிக பணி நீக்கத்தை தவிர பெரிய தண்டனை எதுவும் வழங்கப்படுவதில்லை. பிழைப்பூதியம் என்ற முறையில் முழுச்சம்பளத்தையும் பெற்றுக் கொண்டு வாய்தாக்களோடு வளமாகத்தான் வாழ்கிறார்கள்.

சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும்
தீர்ப்புகளும் திருத்தப்பட வேண்டும்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் பாடல் வரிகளில் கூறப்பட்டுள்ளது போல்

திட்டம் போட்டு திருடுகிறக்கூட்டம்
திருடிக்கொண்டே இருக்குது.
அதை சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம்
தடுத்துக்கொண்டே இருக்குது.
திருடனாய் பார்த்து திருந்தா விட்டால்..
திருட்டை ஒழிக்க முடியாது...

## பட்ட மேற்படிப்பு, ஆய்வு படிப்புகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஓராண்டு உயர்வு வழங்குவது சம்மந்தமான வாரிய உத்திவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**SECRETARIAT BRANCH,**
**144, ANNA SALAI,**
**CHENNAI - 600 002**

**Memo (Per) No. 44662/A3/A32/2018-5, Dated : 01-10-2021**

Sub : TANGEDCO - Sanction of advance increment to the Board's Engineers who acquired P.G / Ph.D in Engineering - Orders Issued - Further instructions - Issued - Regarding.

Ref :
1. Board's Proceedings Ms. (FB) No.78 (SB) dated: 04.09.1985.
2. Secretariat Branch Memo. (Per.) No.91974/A3/A32/2009-2, dated:07.10.2010.
3. (Per.) CMD TANGEDCO Proceedings No.198 (SB) dated:18.08.12.
4. (Per.) CMD TANGEDCO Proceedings No.69 (SB) dated: 27.04.15.
5. Secretariat Branch Memo. (Per.) No.34199/A3/ A32/2015-5, dated:07.09.2015.
6. (Per.) CMD TANGEDCO Proceedings No.151 (SB) Dated:06.08.19.
7. (Per.) FB TANGEDCO Proceedings No.10 (SB) dated:23.03.2020.

In the reference first to sixth cited, orders were issued for sanction of advance incentive increments to Engineers of TANGEDCO for having acquired P.G degree and Ph.D in Engineeringto the Board's Engineers upto and inclusive level of Executive Engineer.

2. In the reference seventh cited, cancelling the scheme of sanction of advance increment to the Board's Engineers upto the level of Executive Engineer who acquired P.G/Ph.D in Engineering in the orders issued in the reference first to sixth cited. In the said order among other things, if the Board's Engineers who have been sanctioned advance increment for having acquired P.G/Ph.D in Engineering through Deemed Universities without approval of the Competent Authority (Chairman cum Managing Director) and also studied through distance mode before 18.08.2012, the t'ecognition of the Deemed Universities should be verified by the Secretariat Branch as per the existing orders.

3. It has been brought to the notice that most of the Board's Engineers **have been** sanctioned advance increment for having acquired P.G/Ph.D **through** Deemed-to-be Universities without approval of the Competent Authority (Chairman cum Managing Director). Hence, the following instructions are issued:-

i. The orders issued in the (Per.) **FB** TANGEDCO Proceedtngs No.10 **(SB) (93)** dated:23.03.2020 shall be implemented without any deviation.

ii. The Chief Engineenr / Superintending Engineers are directed to send all pending proposals seeking **clarificatian/ractification/regularization** in respect of P.G/Ph.D advance increment to the **Secretary/** TANGEDCO for sanction of incentive increment from the Competent Authority (i.e.,Chairman cum Managing Director) for due verification with University Grants Commission (UGC)/AII India Council for Technical Education (AICTE) on case to case basis. The effect of advance incentive increment shall be made only on clearance received from the Secretary / TANGEDCO.

iii. The Chief **Engineers/Superintending** Engineers have been instructed to ensure the genuineness of the degree with the Deemed-to-be Universities concerned before sanctioning of advance increment.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN**

**SECRETARY**

---

## தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின்

## ஐடிசி கோட்ட மாநாடு

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சென்னை தெற்கு கிளை -2க்கு உட்பட்ட ஐடிசி கோட்டத்தின் மாநாடு 26.10.2021 அன்று நடைபெற்றது. இதில் மத்திய அமைப்பின் மாநில துணைத் தலைவர் தோழர் பால்ராஜ், மண்டல செயலாளர் தோழர் முருகானந்தம், கிளைச்செயலாளர் தோழர் அன்பழகன் ஆகிய தோழர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

மாநாட்டில் தலைவராக தோழர் யு. சந்திரன், செயலாளராக என். பிரபுதேவா, மற்றும் தோழர்கள் சிவபிரகாசம், டில்லிராஜா, சுதாகர், ஜி. பிரேம்குமார், கே.என். இளங்கோவன்,நீலவிநோதன், சதீஷ்குமார், சீனிவாசன், ஈ. சசிகுமார், பாஸ்கர், டி. ரவி (கேங்மேன்) மற்றம் விநோதினி, சாரதா ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.



# மின்வாரிய பணியாளர்களுக்கு 2020 - 2021 ஆண்டுக்கான போனஸ் மற்றும் கருணை தொகை வழங்க வாரிய உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**(ABSTRACT)**

TANGEDCO - Bonus and Ex-gratia to Workmen of TANGEDCO for the year **2020-2021** - Orders - Issued.

**(SECRETARIAT BRANCH)**

**(Per) CMD TANGEDCO Proceedings No.210,** **Dated 26th October 2021**

Aippasi-9,
Thiruvalluvar Aandu-2052.

**Read:-**

i. (Per) FB TANGEDCO Proceedings No.9, (SB) dated: 02.03.2018.
ii. G.O. Ms. No.235, Finance (BPE) Department, dated:23.10.2021.

*****

**PROCEEDINGS:-**

The quantum of Bonus and Ex-gratia payable for the financial year **2020-2021** to the Workmen of the TANGEDCO covered by the Wage Settlement has been considered in consultation with Government. The ceiling limit for Rs.3,500/- payment of Bonus and Ex-gratia has been enhanced to Rs.7,000/- as per the Revised Bonus Act, 2015. In the Government Order second read above, the Government have accorded sanction for payment of Bonus and Ex-gratia to the employees of the State Public Sector Undertakings.

2. In pursuance of the above Government Order, it is hereby ordered that the Workmen of the TANGEDCO covered by the Wage Settlement, be paid a Bonus calculated at the rate of 8.33% of the salary (or) wage earned by them during the financial year **2020-2021**, subject to and in accordance with the provisions of the Payment of Bonus Act, 1965 and as amended under the revised Bonus Act, 2015.

3. The workmen of the TANGEDCO (monthly paid and full-time workmen), Helper (Trainees), Office Helper (Trainees), Assessors (Trainees), Mazdoor (Trainees) appointed with the time scale of pay and Gangman (Trainee) appointed on consolidated wages and also the workmen of the State Government, Central Government and other organisations, who had worked with Board on deputation during the financial year **2020-2021** drawing a salary (or) wage, including those drawing pay exceeding Rs.21,000/- per month, will be eligible for the Bonus sanctioned in para-2 above.

4. The Part-time Sweepers and Sanitary workers who are getting the time scale of pay during the financial year **2020-2021**, drawing the salary (or) wage, are also eligible for the Bonus sanctioned in para-2 above.

5. It is also ordered that the workmen of the Board covered by the Wage Settlement and the deputationists, entitled to get Bonus with reference to the orders in paras 2,3 and 4 above, shall also be paid an Ex-gratia at the rate of 1.67% of the salary (or) wage earned by them, during the financial year **2020-2021**.

6. The contract labourers who have been absorbed as Mazdoor (Trainee), during the year **2020-2021** are eligible only for the Bonus and Ex-gratia in a proportionate manner for the period they had worked in the above post. Further, where the salary (or) wage of a workman entitled to Bonus exceeds Rs.7,000/- (Rupees Seven thousand only) per mensem, the Bonus payable to such workman shall be calculated as if his salary (or) wage is Rs.7,000/- (Rupees Seven thousand only). The maximum Bonus amount payable shall be Rs.6,997/- (Rupees Six thousand Nine hundred and ninety seven only).

7. Salary (or) wage for the purpose of payment of Bonus will include the following:-

(a) Basic Pay-Leave Salary;
(b) Dearness Pay;
(c) All classes of special pay (including Short hand and Typewriting Special Pay);
(d) Personal Pay;
(e) Additional Pay for additional charge;
(f) Additional days wage paid for work on National Holidays and Festival Holidays;
(g) Dearness Allowance;
(h) Personal Compensatory Allowance given for protecting loss of pay; and
(i) Deputation Allowance.

The term 'Salary' or 'Wage' will not include Interim Relief, over-time pay and allowances and any pay and allowance other than those mentioned from (a) to (i) above. Salary (or) Wage for the leave surrendered by an employee during **2020-2021** should not be taken into account for computation of Bonus.

8. All the workmen, who had worked in the establishment for not less than thirty working days in the financial year **2020-2021**, are entitled to the payment of Bonus.

9. The Ex-gratia amount payable shall be Rs.1,403/- (Rupees One thousand Four hundred and three only). This Ex-gratia will be reduced on actual basis if a workman had not worked on all the working days in the financial year **2020-2021** as per the provisions of Section 13 of the Payment of Bonus Act, 1965 and as amended in Revised Bonus Act, 2015.

10. The Bonus and Ex-gratia payable to Workman shall also be calculated, as if his/her salary (or) wage is Rs.7,000/- (Rupees Seven thousand only) per mensem. Under this method, the Bonus and Ex-gratia amount payable shall be Rs.6,997/- and Rs.1,403/-respectively. The Bonus and Ex-gratia payable to a Workman shall not exceed Rs.8,400/- (Rupees Eight thousand and Four hundred only) for the full year.

11. The TANGEDCO also directs that the workman, who is now under suspension, but was on duty during the financial year **2020-2021**, also be paid Bonus for the year **2020-2021** subject to the conditions mentioned above.

12. If, during any part of the financial year **2020-2021**, a workman covered by the Wage Settlement was promoted to officer category, he/she shall also be paid the Bonus in a proportionate manner for the period he/she had worked in the workmen category.

13. The workman covered by the Wage Settlement, who had worked in the financial year **2020-2021** fully (or) partly, but had retired (or) died subsequently shall be paid the Bonus fully (or) proportionately, as the case may be to the legal heir of the deceased.

14. The expenditure on the payment of Bonus shall be debitable to the following head of account:"TANGEDCO Funds - Revenue Expenses - Account No.75.501" and the expenditure on the payment of Ex-gratia shall be debitable to "Account No.75.502".

15. The TANGEDCO also directs that the Bonus payment for the year **2020-2021** should be disbursed immediately by cashless mode of Electronic Clearance System (ECS) to all the eligible employees of TANGEDCO on **29.10.2021.**

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**




# பாலியல் குற்றச்சாட்டில் செயற்பொறியாளர் இடமாற்றம்!

திருப்பத்தூர் மின் பகிர்மான வட்டத்தின் திருப்பத்தூர் கோட்ட செயற்பொறியாளராக பணி புரிந்து வருபவர் திரு. கிருஷ்ணன் என்பவர். இவர் தனக்கு கீழ் பணிபுரியும் பெண் பணியாளர்கள் மற்றும் பெண் அலுவலர்கள் ஆகியோர் இடையே பாலியல் தூண்டும் வகையில் ஆபாசமாக பேசுவதும், சீண்டலிலும் ஈடுபட்டதாக தெரிகிறது. ஒரு கட்டத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்கள் எழுத்து பூர்வமாக மேற்பார்வை பொறியாளர்/ திருப்பத்தூர் அவர்களிடம் புகார் தெரிவித்தனர். அதோடு தமிழக முதல்வர்/தனி பிரிவு, மின் வாரிய தலைவர், மாவட்ட ஆட்சியர் என அனைவரிடமும் புகார் கொடுத்தனர்.

இதனையடுத்து மத்திய அமைப்பின் திருப்பத்தூர் கிளை செயலாளர் தோழர் சிவசீலன், பொருளாளர் மற்றும் மாநில நிர்வாகி தோழர் ஜோதி, வட்டத்தலைவர் அருள், மண்டல செயலாளர் தோழர் கோவிந்தராஜ், தோழர் சங்கரி மாதர்சங்கம் ஆகியோர் தலைமைப் பொறியாளர் வேலூர் மண்டலம் அவர்களை சந்தித்து உடனடி நடவடிக்கை எடுக்க கோரினார். 01.10.2021 அன்று திருப்பத்தூர் வட்ட அலுவலகம் முன்பு பாதிக்கப்பட்ட பெண்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் துறைரீதியான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மத்திய அமைப்பின் மாநில மையமும் மின்வாரிய தலைவரிடமும் கடிதம் கொடுத்து செயற்பொறியாளர் கிருஷ்ணன் அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்து துறைரீதியான விசாரணையை மேற்கொள்ள வலியுறுத்தினோம்.

இதனையடுத்து குற்றம் சுமத்தப்பட்ட செயற்பொறியாளர் கிருஷ்ணனுக்கு ஆதரவாக சில உயர்அலுவலர்கள் செயல்பட்டு திருப்பத்தூர் 230 கி.வா. துணை மின் நிலையம், அதாவது ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் பணியிட மாற்றம் செய்ய உதவி புரிந்தனர்.

நமது வற்புறத்தலை தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாகா கமிட்டி கடந்த 05.10.2021 அன்று பாதிக்கப்பட்ட நான்கு பெண் ஊழியர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். இந்த நான்கு பெண் தோழர்களின் துணிச்சலைக்கண்ட இதர பெண் ஊழியர்கள் 14 பேர் கமிட்டி முன்பு தங்களது எழுத்து பூர்வமான கடிதம் அளித்தனர்.

பாலியல் குற்றச்சாட்டுக்குள்ளான செயற்பொறியாளர் கிருஷ்ணன் புகார் தந்த பெண் ஊழியர்களின் வீட்டுக்கு நேரிடையாக சென்று புகாரை வாபஸ் வாங்க கெஞ்சுவதோடு மிரட்டலும் செய்து வருகிறார். தொழிற்சங்க தலைவர்களிடமும் தன்னை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க உதவி செய்யுமாறு கோரி வருகிறார். இந்த கபடதாரி செயற்பொறியாளர் கிருஷ்ணன் தவறே செய்யவில்லையெனில் எதற்காக கெஞ்ச வேண்டும். இதிலிருந்தே இவர் குற்றம் புரிந்திருக்கிறார் என உணர முடிகிறது. இப்படிப்பட்ட மோசமான அதிகாரிக்கு சில உயர் அலுவலர்கள் உதவி செய்வது வெட்கக்கேடானது.

தனது மனைவியை தவிர மற்ற பெண்களை தாயாய், சகோதரியாய், மகளாய் பார்க்க தெரியாத இந்த அருவருக்கத்தக்க கிருஷ்ணன் போன்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களை அடையாளங்கண்டு தக்க தண்டனை பெற்றுத்தந்தால் மட்டுமே பெண்கள் மின்வாரியத்தில் பாதுகாப்பாய் பணி செய்ய இயலும்.

விசாரணைக் கமிட்டி முடிவுகள் வாரிய தலைமைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வாரியத் தலைவர் நடவடிக்கை எடுத்து திரு. கிருஷ்ணன் அவர்களை சென்னைக்கு (R&D Lab) மாறுதல் செய்து உத்திரவு வழங்கியுள்ளார். துறை ரீதியான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


நாள்: 01.11.2021

பெறுநர்

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002

ஐயா,

வணக்கம்

பொருள் : பணியாளர்களின் தீர்க்கப்படாத கோரிக்கைகள் - தொடர்பாக

பார்வை : எங்களது சங்க கடித நாள் 19.08.2021

மின்வாரிய பணியாளர்களின் தீர்க்கப்படாத பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக கடந்த 19.08.2021 அன்று காலநிலை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் பல்வேறு பிரச்சனைகள் மீது இன்றளவும் தீர்வு எட்டப்படவில்லை என்பது கவலை அளிக்கிறது. எனவே கீழ்கண்ட கோரிக்கைகள் ஏற்கனவே தங்களிடம் விவாதிக்கப்பட்டு தீர்வு எட்டப்படாத நிலையில் உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

1. வேலைபளு ஒப்பந்தத்தின்படி உருவாக்கப்பட்ட 63 பிரிவு அலுவலகங்களுக்கும், புதியதாக உருவாக்கப்பட்ட துணை மின் நிலையங்களுக்கும், Rediployment செய்யப்பட்ட கட்டுமானம் உள்ளிட்ட இடங்களுக்கும் பதவிகள் அனுமதித்திட வேண்டும்.

2. பகுதிநேர பணியாளர்களில் ஒருசாரருக்கு சத்துணவு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்கி பணி நிரந்தரப் படுத்தப்பட்டனர். மீதமுள்ளவர்களுக்கு இன்று வரை உத்தரவு வழங்கப்படவில்லை. இது சம்மந்தமாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3. நிர்வாக மேற்பார்வையாளரிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் பதவி உயர்வு கடந்த மே, 2021 மாதத்திலிருந்து வழங்கப்படாமல் உள்ளது. அதே போல உதவியாளர் (நிர்வாகம்) பதவியிலிருந்து நிர்வாக மேற்பார்வையாளர் பதவி உயர்வும் இளநிலை உதவியாளர் (நிர்வாகம்) பதவியிலிருந்து உதவியாளர் பதவி உயர்வும் பல மாதங்களாகி வழங்கப்படாமல் உள்ளது.

4. கணக்கீட்டாய்வாளர் பதவிலிருந்து வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வும் பல மாதங்களாக தயார் நிலையிலிருந்து வழங்கப்படாமல் இருப்பது சரியல்ல என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்.

5. விருப்ப மாறுதல் விண்ணப்பங்கள் கடந்த 01.07.2021 முதல் 15.07.2021 வரை வந்த விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து மாறுதல் உத்தரவு வழங்கப்படவில்லை.

6. வாரிசு வேலைக்கான பணி நியமன உத்தரவுகள் பெறப்பட்டும் மறு நியமன ஒதுக்கீடு செய்யப்பட்டும், மாவட்டத்தில் உள்ள பல்வேறு அமைச்சர்களிடம் தேதிகேட்டு காத்திருப்பது பொருத்தமானதாக இல்லை. உடனடியாக பணி நியமன உத்தரவுகளை வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

7. நிர்வாகப்பிரிவில் நிரப்பப்படாமல் உள்ள முதுநிலை பணித்தொகுதி அலுவலர், உதவி பணித்தொகுதி அலுவலர், கண்காணிப்பாளர் ஆகிய பதவிகளை நிரப்பிட வேண்டும்.

8. உதவியாளர் (கணக்கு) தேர்வில் இருந்து கணக்கு மேற்பார்வையாளர் பதவி உயர்வும், இளநிலை உதவியாளர்(கணக்கு) பதவியிலிருந்து உதவியாளர் (கணக்கு) பதவி உயர்வும் வழங்கப்பட வேண்டும்.

9. பஞ்சாயத்து காசோலை தொடர்பாக கணக்கீட்டாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையை கைவிடுவதோடு சுமூகத்தீர்வுக் கண்டு நடவடிக்கை காண வேண்டும்.

10. மின்வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை வாரிய ஆணை B.P. (Chairman) No 9 (Adm Br) dt 09.01.2008 படி அடையாளங்கண்டு முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தினக்கூலியாக ரூ.380/-ஐ வாரியமே நேரிடையாக வழங்கிட வேண்டும். 05.01.1998-க்கு பின்பு 09.02.2008 வரை தொடர்ந்து பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களையும் அதற்கு பின் 09. 02. 2008-க்கு பின்பு இன்று வரை பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களையும் அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்த வேண்டும். அதே போல அனல், புனல் வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களையும் அடையாளங்கண்டு நிரந்தரப்படுத்த வேண்டும்.

11. கடந்த 22.02.2018-ல் தொழிற்சங்கங்களுடன் ஏற்படுத்தப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மின்வாரியத்தில் பயிற்சி காலம் என்பது மூன்று மாதங்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் கேங்மேன் பணியாளர்களுக்கு இரண்டாண்டுகள் தொகுப்பூதியம் என வரையறுத்தது, முத்தரப்பு ஒப்பந்தத்திற்கு எதிரானது. எனவே பயிற்சி காலம் மூன்று மாதங்கள் என நிர்ணயம் செய்து காலநிலை ஊதியமாக மாற்றப்பட வேண்டும். மேலும் அவர்களுக்கு ஊர்மாறுதல் உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

12. அனல்,புனல், உற்பத்தி நிலையங்களில் களப்பிரிவு ஊழியர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் அனல், மின் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட தெர்மல் அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து சுமூக தீர்வுகாண வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

# மன்னிப்புக்கு புதிய இலக்கணம்

சாவர்க்களின் மன்னிப்பு கடிதம் கைதி எண் 32778

"................ எனவே பெரும் கருணையும், பன்முக தன்மையும் என்னும் மாட்சிமை தாங்கிய (பிரட்டிஷ்) அரசாங்கம் என்னை விடுதலை செய்தால் ஆங்கிலேய அரசுக்கும், அந்த அரசின் சட்டதிட்டங்களை முன்னேற்றுவதிலும் மிகவும் வலிமையான, உறுதியான ஆதரவாளனாக இருப்பேன் என்பதை கூறிக்கொள்கிறேன்."

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

தலைவர் **தி. ஜெயசங்கர்** | பொதுச் செயலாளர் **எஸ்.இராஜேந்திரன்** | பொருளாளர் **எம்.வெங்கடேசன்**

நாள்: 01.11.2021

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை 600 002
ஐயா,

வணக்கம்

பொருள் : நிர்வாகம் - மருத்துவ காரணங்களுக்காக வாரிய பணியிலிருந்து பணி ஓய்வு பெறும் போது 53 வயதுக்குள் இருந்தால் கருணை அடிப்படையில் வாரிசு வேலை - 55 வயதாக நீட்டிக்க கோருதல் - தொடர்பாக

பார்வை : B.P. No. 25 நாள் 09.10.2001

பார்வையில் கண்ட உத்திரவு வாயிலாக மருத்துவ காரணங்களால் தகுதியிழக்கும் வாரிய பணியாளர்களின் வயது 53-க்குள் இருந்தால் கருணை அடிப்படையில் தகுதி இழக்கும் பணியாளர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்க குறிப்பிடப்பட்டிருந்தது.

தற்போது தமிழக அரசு மின்வாரிய பணியாளர்களுக்கு பணி ஓய்வு பெறும் வயது வரம்பை 58-ல் இருந்து 60 ஆக உயர்த்திய காரணத்தால் மருத்துவ காரணங்களால் தகுதியிழக்கும் பணியாளர்களின் வாரிசு வேலைக்கான 53 வயது என்பதை 55 வயதாக உயர்த்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

எனவே, தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள் இக்கடிதத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து கருணை அடிப்படையில் வாரிசு வேலை வழங்க மருத்துவ காரணங்களால் பணி இழக்கும் பணியாளர்களின் வயது வரம்பை 53-ல் இருந்து 55 ஆக உயர்த்தி உரிய உத்தரவு வழங்கிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

**தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு**
(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

CITU

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை 600 002
ஐயா

பொருள் : **தமிழ்நாடு மின்சார வாரியம் - 2020 - 2021- ஆம் ஆண்டுக்கான போனசுக்கான கோரிக்கை அளிப்பது சம்மந்தமாக**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், பகுதி நேர ஊழியர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் ஆகியோருக்கு 2020 - 2021 ஆம் ஆண்டு போனஸ் வழங்குவது சம்மந்தமான எங்களது கோரிக்கையை தங்களின் கவனத்திற்கு முன்வைக்க விரும்புகிறோம்.

தமிழக மின்வாரியத்தில் 3 கோடியே 19 லட்சம் மின் நுகர்வோர்களும் 3,10,000-க்கும் மேற்பட்ட மின் மாற்றிகளும், 1,700-க்கும் மேற்பட்ட துணை மின் நிலையங்களை உள்ளடக்கிய மின் வாரியமாக உயர்ந்து நிற்கின்றது, உபயோகிக்கும் மின்சாரத்திற்கு உண்டான மின் கட்டணத்தில் 95 சதவீதத்திற்கு மேல் வசூல் செய்யும் மின்சார வாரியமாக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தமிழக மின்சார வாரியத்தின் வரவு - செலவு கணக்கை பரிசீலிக்கின்ற போது ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையை சமாளிக்க மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்காக செய்யும் செலவும், எரிபொருள் பயன் பாட்டிற்காக செலவழிக்கின்ற தொகையும் கடந்த 12 ஆண்டுகளில் பல மடங்காக உயர்ந்துள்ளது.

தமிழக மின்வாரியத்தில் ஊழியர்கள் எண்ணிக்கையில் பற்றாக்குறையும், தரமற்ற தளவாட சாமான்கள் ஆகியவைகள் இருந்த போதிலும், மின்வாரிய ஊழியர்கள் தங்களது உயிரை பணயம் வைத்து பணியாற்றி, புதிய மின் இணைப்புகளை கொடுப்பது, பழுது ஏற்பட்டால் தடைகளை நீக்குவது, இயற்கை பேரிடர் காலங்களில் நமது இராணுவத்திற்கு இணையாக பணியாற்றி மின்சாரத்தை உடனடியாக மக்களுக்கு அளிப்பது என்ற பணிகளில் நமது ஊழியர்களும் பொறியாளர்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

தேசம் முழுவதும் கொடிய கொரானா தொற்றால் பாதிக்கப்பட்ட பொழுது மக்கள் வீடுகளில் பாதுகாப்பாக இருக்க தடையில்லா மின்சாரத்தை வழங்கி, களப்பணியாற்றியவர்கள் மின்வாரிய ஊழியர்கள். இதில் முன்கள பணியாளர்கள் தொற்றுக்கு ஆளாகி 270-க்கும் மேற்பட்ட ஊழியர்கள், பொறியாளர்கள் மற்றும் அதிகாரிகள் மரணமடைந்து உள்ளனர். சிலர் சிகிச்சையில் குணமடைந்தும் பலர் இந்த தொற்றுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில் மின் வாரிய ஊழியர்களுக்கு இந்த ஆண்டு வழங்கும் போனஸ் சதவீதத்தில் ஒரு குறைந்தபட்ச மாற்றத்தையாவது உருவாக்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

தமிழக மின் வாரியத்தில் அனுமதிக்கப்பட்ட பதவிகளில் 52,000-க்கும் மேற்பட்ட பதவிகள் காலிப்பணி இடங்களாகவே உள்ளது. இதனால் மின்வாரியத்திற்கு மாதத்திற்கு சுமார் ரூ.62 கோடி செலவினத்தில் மிச்சப்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

மின்வாரியத்தில் மின் உற்பத்தி, மின் நுகர்வோர்களின் எண்ணிக்கை உயர்வும், அவர்களின் சேவை உத்தரவாதப்படுத்துவதற்கு செலவு செய்யும் தொகை கூடுதலான போதிலும் மின்வாரியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கும் போனஸ் கடந்த இருபது ஆண்டுகளாக 20 சதவீதமாகவே உள்ளது என்பது நியாயமில்லை என்பதை சுட்டிக்காட்டிட விரும்புகின்றோம்.

மேலே சொல்லப்பட்ட விவரங்களின் அடிப்படையில் எங்களது கோரிக்கையின் நியாயத்தை உணர்ந்து 2020 - 2021 ஆம் ஆண்டுக்கு கீழ்கண்ட வகையில் போனஸ் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கின்றோம்.

**கோரிக்கைகள்**

1. வாரிய ஊழியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள், பகுதிநேர ஊழியர்களுக்கு போனஸ் மற்றும் கருணைத் தொகை 25 சதவீதம் வழங்கிட வேண்டும்.
2. மின்வாரியத்தில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு 25 சதவீதம் கருணைத்தொகையாக வழங்கிட வேண்டும்.
3. 31.03.2021 வரை பணியாற்றும் நீதிமன்ற தீர்ப்புக்கு உட்படாத அனைத்து பகுதி நேர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு நிரந்தர ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல 25 சதவீதம், போனஸ், கருணைத் தொகையை வழங்கிட வேண்டும்.
4. கடந்த ஆண்டு 12 தொழிலாளிகள் மட்டுமே ஒப்பந்த தொழிலாளிகளாக உள்ளதாக அறிவித்து அவர்களுக்கு கருணைத் தொகை என்று வழங்கியது நியாயமல்ல என்பதை குறிப்பிட்டு இந்த ஆண்டு அனல், புனல், உற்பத்தி பொதுகட்டுமான வட்டம், விநியோக வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களை அடையாளங்கண்டு 25 சதவீத போனஸ் கருணைத் தொகையை வழங்கிட வேண்டும்.

தீபாவளிப் பண்டிகை நெருங்கும் இக்கால கட்டத்தில், மேற்கூறிய அம்சங்களை ஆராய்ந்தும், எங்களது கோரிக்கையை கவனத்தில் கொண்டு சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அதன் அடிப்படையில் கூடுதல் போனஸ் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 044-28548529

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **தி. ஜெயசங்கர்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |


**நாள்: 11.10.2021**

பெறுநர்

**செயலாளர் அவர்கள்,**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோக கழகம்,

144, அண்ணாசாலை,

சென்னை 600 002

ஐயா

பொருள் : 2020-2021 - மின்வாரிய ஊழியர்களுக்கு போனஸ் - தொழிற் சங்கத்திற்கான போனஸ் நன்கொடையை பணியாளர்களின் போனஸ் தொகையில் பிடித்தம் செய்து வழங்கிட வேண்டுதல் தொடர்பாக

பார்வை : 1. (Permanent) B.P. (Ch). No. 77 (SB) Dated 28/02/2007

2. (Permanent) B.P. (Ch). No. 111 (SB) Dated 09/05/2007

பார்வையில் கண்டுள்ள வாரிய உத்தரவின் மூலம் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் பொறியாளர் மற்றும் தொழிலாளர்களிடம் தொழிற் சங்கத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற போனஸ் நன்கொடை தொகையினை பணியாளர்களின் விருப்பத்தின் பேரில் பிடித்தம்செய்து தொழிற் சங்கத்திற்கு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2020 - 2021 ஆம் ஆண்டு போனஸ் வழங்கும் போது போனஸ் நன்கொடை தொகையை செலுத்திட விருப்பம் தெரிவிக்கும் பணியாளர்களிடம் போனஸ் தொகையில் நன்கொடை பிடித்தம் செய்து எங்களது தொழிற்சங்கத்திற்கு வழங்கிட தகுந்த உத்திரவு வழங்கிடுமாறு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு/சிஐடியு (பதிவு எண் 158 /CPT) சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

போனஸ் நன்கொடையைப் பொருத்த வரையில் ஒரு தொழிலாளி ஒரு சங்கத்திற்கு மேலும் நன்கொடை அளிப்பதற்கு விருப்பம் தெரிவிக்கலாம். அந்த அடிப்படையில் வேறு சங்கத்தை சார்ந்தவர்களும் எங்களது அமைப்புக்கு நன்கொடை அளிக்க விருப்பம் தெரிவித்தால், அவர்களிடமும் நன்கொடையை வசூலித்து அளிக்க வகை செய்யும் சரத்தையும் சேர்த்து உத்தரவு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடை தருவதற்கு விருப்பம் தெரிவிக்கின்றவர்கள் மத்தியில் போனஸ் பட்டுவாடாவில் பிடித்தம் செய்ய வாய்ப்பில்லாமல் போகுமானால் அவர்களுடைய நவம்பர் மாத சம்பளம் டிசம்பரில் அளிக்கும் போது அதிலும் பிடித்தம் செய்து அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எங்களது வேண்டுகோளின் அடிப்படையில் 2020 - 2021 ஆம் ஆண்டு வாரியம் வழங்கிட உள்ள போனஸ் நன்கொடையாக 2021 நவம்பர் மாத ஊதிய தொகையில் ரூ.500/-ஐ (ரூபாய் ஐந்து நூறு மட்டும்) விருப்பம் தெரிவிக்கும் ஊழியர்களிடம் பிடித்தம் செய்து எங்களது சங்கத்திற்கு வழங்கிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தங்கள் உண்மையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச்செயலாளர்

மின்ஊழியர் மத்திய அமைப்புக்கு....

# விருப்பமுள்ள மின்வாரிய ஊழியர்களிடமிருந்து நன்கொடை பிடித்தம் செய்துதர வாரியம் பிறப்பித்த உத்திரவு

**TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LIMITED**

**SECRETARIAT BRANCH**
**144, ANNA SALAI,**
**CHENNAI-600 002.**

**Memo. (Per.) No.38729/A3/A31/2021- 1, Dated:02.11.2021.**

Sub : TANGEDCO - Union – Contribution of Annual Donation to Trade Union - Deduction of donation from the salary of the willing members of Central Organisation of Tamil Nadu Electricity Employees Union – Orders - Issued.

Ref : 1. (Per.) B.P. (Ch) No.111, (SB) dated 09.05.2007.
2. Secretariat Branch Memo. (Per.) No.43915/A3/A31/ 2020-4, dated.10.08.2021.

*****

In the Board's Proceedings first cited, detailed guidelines were issued for deduction of Annual Union Subscription and Donation from the salary of the willing employees. In the standard terms and conditions annexed to the Board's Proceedings, it has been ordered that subscription shall be deducted from the pay bill for May payable in June and Donation shall be deducted from the pay bill for November payable in December every year.

2. In the reference second cited, orders were issued for deduction of Annual Subscription/Donation be permitted from the willing employees of their Union every year and also ordered that the willing employees who made specific request for deduction of Annual Subscription/Donation to the Pay Drawing Officer before 15th May of a year for a union shall be in force for three years. After that the employees should renew their request to the Pay Drawing Officer to deduct Annual Subscription/ Donation to their unions.

3. The Central Organisation of Tamil Nadu Electricity Employees Union has made a specific request to deduct Annual Donation of Rs.500/- from the payment of Bonus and Ex-gratia for the year 2020-2021 or from the pay of November 2021 payable in December 2021.

4. The request has been examined and accepted. Accordingly, it is hereby ordered that a sum of Rs.500/- towards Annual Donation be deducted from the willing members of Central Organisation of Tamil Nadu Electricity Employees Union who make specific written authorization. The above Annual Donation shall be deducted from the pay bill for the month of November 2021 payable in December 2021.

5. The Annual Donation shall be made in the Account Head:44:456 – Central Organisation of Tamil Nadu Electricity Employees.

**(BY ORDER OF THE CHAIRMAN CUM MANAGING DIRECTOR)**

**A.MANIKKANNAN**
**SECRETARY**

To




ஒரு எளிய மனிதராக கம்யூனிஸ்ட்களுக்கு உரிய இலக்கணமாக, எடுத்துக்காட்டாக வாழ்ந்த வந்த தோழர் என். நன்மாறன் 28.10.2021 அன்று மதுரையில் காலமானார்.

தனி மனித சுயநலங்கள், சமூகத்தின் கோளாறுகள் அரசியல் அநீதிகள், அனைத்தையும் நையாண்டி பேச்சால் துவைத்து பகுத்தறிவு வெயிலில் உலர்த்தி விடுவார்.

சங்க இலக்கியம் முதல் புதிய சினிமா வரை, இயல்பான வாழ்க்கை நிகழ்வுகளையே நகைச்சுவையாக கொடுத்து மனதில் பதிய வைக்கும் கலைஞன்.

தோழர் நன்மாறன் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாத ஊதியம் உயர்த்தும், விவாதம் நடைபெற்றது. தோழர் நன்மாறன் ஊதியத்தை உயர்த்த கூடாது என வலியுறுத்தி பேசினார். அப்போது குறுக்கிட்ட முதல்வராக இருந்த ஜெயலலிதா உங்கள் கட்சிகாரர்கள் அனைத்து பணத்தையும் பிடுங்கி கொண்டு குறைந்த ஊதியம் தான் தருவார்கள் என்பதாலா? என கேள்வி எழுப்பினார்.

உடனே தோழர் நன்மாறன், நீங்கள் ஒரு ரூபாய் ஊதியம் வாங்கி கொண்டு இவ்வளவு சிறப்பாக வாழும் போது எங்கள் கட்சி கொடுக்கும் ஊதியத்தில் உங்களை விட மகிழ்ச்சியாக வாழ்கிறேன் எனக் கூறி விட்டார்.

ஒரு சாதாரண மில் தொழிலாளியின் மகனாக பிறந்து, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் மாநிலத் தலைவராக, உழைக்கும் மக்கள் நேசிக்கும் தலைவனாக, கலைஞர்கள் விரும்பும் முற்போக்கு எழுத்தாளனாய், கவிஞனாய் வளர்ந்து தனக்கு கிடைத்த சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை (இருமுறை) மக்களுக்கு சேவை செய்வதற்கு என்ற உன்னத நோக்கத்தோடு பாடுபட்ட தோழர் என். நன்மாறன் இடதுசாரிகளின் மதுரையின் முகமாய் விளங்கியவர்.

அவரது மரணம் கம்யூனிசத்தையும் கலையையும் நேசிப்பவர்களுக்கு பேரிழப்பு.

தோழர் என். நன்மாறன் அவர்களுக்கு மத்திய அமைப்பின் செவ்வணக்கம்.



## தோழர் டி.எஸ். ரங்கராஜன் ( TSR ) மறைவு!

இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் யூனியன் தலைவர், சென்னை மாநகரில் தொழிற்சங்க கூட்டமைப்பை உருவாக்கி, வளர்த்தெடுத்த தொழிற்சங்க முன்னோடி தோழர் டி.எஸ். ரங்கராஜன் 29.10.2021-ல் சென்னையில் காலமானார்.

**அவரது மறைவுக்கு மத்திய அமைப்பின் அஞ்சலி**

# நிலக்கரியும் அனல் மின் உற்பத்தி நிலையங்களும்!



இந்தியாவில் தனியார் மற்றும் மாநில அரசுகளுக்கு சொந்தமான அனல் மின்சாரம் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின் நிலையங்களின் எண்ணிக்கை 135 ஆகும். இந்தியாவின் மொத்த மின் உற்பத்தியில் 52சதவீதம் அனல் மின்சார உற்பத்தியை சார்ந்துள்ளது.

பல மாநில அரசுகள் தங்களுடைய மின் உற்பத்தி நிலையங்களை நிறுவி பல ஆண்டுகள் ஆன நிலையில் தற்போது மத்திய அரசின் சுற்றுச்சூழல் மாசகட்டுப்பாடு அறிவிப்பின்படி மூட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

தமிழக மின்சார வாரியத்தில் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான மேட்டூரில் இரு நிலைகளில் 1440 மெகாவாட் உற்பத்தியும், தூத்துக்குடியில் 1050 மெகாவாட்டும், வடசென்னை இரு நிலைகளிலும் 1830 மெகாவாட்டும் என மின்சார வாரியம் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது.

இவைத்தவிர தேசிய அனல் மின்சார உற்பத்தி கழகமும் ( NTPC ) தமிழ்நாடு மின்சார வாரியமும் வல்லூரில் கூட்டு திட்டத்தின் அடிப்படையில் (Joint Venture) 1500 மெகாவாட் மின் உற்பத்தி செய்து வருகிறது. மேலும் தூத்துக்குடியில் NLCயும் TNEBயும் 1000 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்து வருகிறது.

இதற்கான நிலக்கரிகள் ஒடிசா மாநிலத்தில் தால்கர் என்ற இடத்திலும், மேற்கு வங்கத்தில் அசம்சால் என்ற இடத்தில் இருந்தும் நிலக்கரி சுரங்கத்தில் இருந்து மத்திய அரசின் ( COAL INDIA) நிறுவனம் மூலமாக வெட்டி எடுக்கப்பட்டு கொண்டு வரப்படுகிறது.

இந்த நிலக்கரியை தரமான நிலக்கரியாக ஆய்வு செய்த பின்னரே கப்பலில் அனுமதிக்கப்படும். ஆய்வு செய்ய வேதியாளர்கள், பொறியாளர்கள் செல்வார்கள். அவ்வாறு சென்று அங்கு ஆய்வில் ஈடுபட்டு நிலக்கரியின் தரத்தை ஆய்வு செய்து சான்றளிப்பார்கள். அதன் பின்னரே கப்பலில் ஏற்றப்படும். ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்ணியிக்கப்பட்ட அளவில் கரிதுண்டுகளின் அளவுகள் இருக்க வேண்டும். நிலக்கரி சுத்தமாக கழுவி, உலரவைத்து கப்பலில் ஏற்ற வேண்டும். இந்த அடிப்படையில் பணிகள் நடந்திருக்க வேண்டும் ஆனால் ஆய்வுக்கு சென்றவர்கள் தங்கி இருக்கும் இடத்திற்கும் சுரங்க யார்டுக்கும் தூரம் அதிகமாக இருப்பதால், இரவு நேரங்களில் சுரங்க யார்டில் இருந்து வாகனம் மூலம் கப்பலுக்கு கொண்டு செல்வதில் எடை அளவு குறித்து உறுதிப்படுத்த முடியாது. அடுத்து கப்பலில் இருந்து 3 நாட்கள், 4 நாட்கள் பயணம் செய்த நிலக்கரி வடசென்னைக்கும், தூத்துக்குடிக்கும் வருகின்ற பொழுது முறையாக இறக்குமதி செய்து எடை அளவை குறிப்பதற்கு வசதி இல்லை. நிர்ணயித்த அளவில் சேதாரம் 2 சதவீதம் என்றாலும் தோராயமாக 5 முதல் 7சதவீதம் வரை சேதாரம் ஏற்படும்.

நிலக்கரியை கன்வேயர் பெல்டில் அனுப்புகின்ற போது கன்வேயர் பெல்டில் உள்ள எடை மிஷின் பழுதடைந்து பல ஆண்டுகள் ஆகியும் நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை. ஆகவே Receiving end -ல் எடை அளவை கணக்கிட முடியாத நிலை

ஏற்பட்டுள்ளது.

நிலக்கரியின் இருப்பு அளவுகளை,உற்பத்தி நிலையங்களில் உயரம், அகலம், நீளம், பரப்பளவை கணக்கில் கொண்டு தான் குறித்து வைத்து வருகிறார்கள்.

மத்திய எரிசக்தி துறையின் நட்சத்திர குறியீட்டைப் பெறுவதற்காக அதாவது 1 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய 800 கிராம் என்று உதாரணத்திற்கு நிர்ணகிக்கப்பட்டிருந்தால் நட்சத்திர குறியீட்டை பெறுவதற்காக 1 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய 900 கிராமம் நிலக்கரி செலவானாலும், நாம் 800- 820 என கணக்கு காண்பிக்கும் நிலையே உள்ளது. அதாவது செலவை அதிகம் செய்து குறைத்து காண்பிக்கும் ஏற்பாடு. இல்லையெனில் அனல் மின் நிலையத்தை மூடும் நிலைக்கு மத்திய அரசு தள்ளி விடும். தற்போது மேட்டூரில் 3 அலகுகள் 210 X 3 = 25 ஆண்டுகளுக்கு மேலும், அதே போல தூத்துக்குடியில் 3 அலகுகள் 25 ஆண்டுகளுக்கு மேல் செயல்பட்டு வருகிறது. வடசென்னை நிலை ஒன்றில் மூன்று அலகுகளுமே 25 ஆண்டுகளுக்கு மேல் உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறது. இந்த மின் நிலையங்கள் எல்லாம் தங்களது நிர்ணயிக்கப்பட்ட கால அளவை எட்டியும் போனஸாக உற்பத்தி செய்து வருகிறது.

தற்போது ஒன்றிய அரசு செயற்கையான நிலக்கரி தட்டுப்பாட்டை உருவாக்கி உள்ளது. மாநில மின்வாரியங்களுக்கு சொந்தமான அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியை வழங்க கால தாமதத்தை ஏற்படுத்தி தனியார் பெருமுதலாளிகளுக்கு தங்குதடையின்றி வழங்குகிறது.

ஒன்றிய அரசின் நோக்கம் ஏற்கனவே மின்சார உற்பத்தியில் 52 சதமானம் தனியார் ஈடுபட்டு வரும் நிலையில் போட்டிச் சந்தையை உருவாக்கி மின் உற்பத்தியை முழுக்க முழுக்க தனியாரிடத்தில் கொடுப்பதோடு மின் விநியோகத்தையும் மாநில அரசுகள் தனியாரிடம் ஒப்படைக்க திட்டம் தீட்டி அமலாக்கம் செய்ய முயற்சி செய்து வருகிறது.

ஆகவே தான் 6 லட்சம் கோடி நிதியை திரட்ட தேசிய பணமாக்கல் திட்டத்தின் அடிப்படையில் அனைத்துக்கும் தாய் தொழிலான மின்சார துறையையும் உற்பத்திக்கு மூலப்பொருளான நிலக்கரியையும், நிலக்கரி கொண்டு வருவதற்கான ரயில் தடங்களையும் துறைமுகங்களையும் விற்பதற்கு திட்டம் தீட்டியது.

மனிதனின் அங்கங்களை வெட்டி எடுத்து முண்டமாக்குவது போல மின்துறையை பாதுகாக்காமல் மின் உற்பத்திக்கு தேவையான மூலபொருட்களை, வழித்தடங்களை (ரயில்- கப்பல்) தனியாருக்கு கொடுப்பது, அதன் மூலம் மின் உற்பத்தி தனியாரிடம் போனால் மாநில அரசுகள் தனியாரிடம் கை ஏந்தும் நிலை உருவாகும். கூடுதல் விலை கொடுத்து மின்சாரம் வாங்கி விநியோகிக்க வேண்டிய நிலை உருவாகும்.

எனவே ஒன்றிய அரசினுடைய நிலக்கரி சுரங்கங்களை பாதுகாக்க வேண்டிய கடமை மாநில அரசுகளுக்கு உண்டு.

மாநில அரசுகள் கவனம் செலுத்துமா?

**- எஸ். இராஜேந்திரன்**






# டிசம்பர் 10-ல் 10 நிமிட போராட்டம்!

கடந்த 20 மாதங்களாக கொரானா தொற்று நோய் காரணமாக உழைப்பாளி மக்களின் வாழ்வாதாரங்கள் பறிபோன நிலையில் தொழில்கள் நசிவடைந்த சூழலில் ஒருபுறம் மழையின்மை காரணமாக வறட்சியும் மறுபுறம் மழை வெள்ளத்தால் விவசாயிகளும் பாதிக்கப்ப்பட்ட நிலையில் ஒன்றிய அரசு பெட்ரோலிய பொருட்களின் விலையை உயர்த்தி வருகிறது. தமிழகத்தில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.105/- டீசல் ஒரு லிட்டர் ரூ 100/- அளவிலும் கிடைத்து வருகிறது.

சாமான்ய மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு பொருள்களின் விலையும் கடுமையாக உயர்ந்து மக்கள் வாங்கும் சக்தி குறைந்து கடுமையான நெருக்கடியை அனைத்து தரப்பினரும் சந்தித்து வருகின்றனர். எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் விலையை நிர்ணயம் செய்ய அனுமதி கொடுத்ததின் விளைவும், இந்திய பெருமுதலாளிகளான அதானி, அம்பானி வகையறாகைகளில் பெட்ரோலிய கம்பெனிகள் சென்ற காரணத்தால்அவர்கள் இலாபத்தை மட்டுமே எதிர்பார்த்து மக்களின் தலையில் சுமைகளை சுமத்தி வருகின்றனர்.

ஒன்றிய அரசின் இந்த கண்மூடிதனமான நடவடிக்கைகளை உழைப்பாளி மக்கள் அனைத்து தரப்பினரிடமும் கொண்டு செல்ல வேண்டுமென சிஐடியு முடிவு செய்துள்ளது. எதிர்வரும் டிசம்பர் 10 அன்று மாநிலம் முழுவதும் நண்பகல் 12 மணி முதல் 12.10 மணி வரை 10 நிமிடம் வாகனங்களை நிறுத்தி போராட்டம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. மின்வாரிய பணியாளர்களும் இந்த போராட்டத்தில் இணைய வேண்டிய கடமை நமக்குள்ளது.

ஒன்றிய அரசின் பெட்ரோல் விலை உயர்வை எதிர்க்கின்ற அனைத்து அமைப்புகளையும் இந்த இயக்கத்தில் இணைக்க சிஐடியு முடிவு செய்துள்ளது.

இந்த போராட்டத்திற்கான பிரச்சாரங்களை பெட்ரோல் நிலையங்கள், சுங்கச்சாவடிகள், பேருந்து நிலையங்கள், சந்தைகள் என மக்கள் கூடும் இடங்களில் விரிவாக பிரச்சாரம் செய்வது இது நமக்கான போராட்டம், நம் மக்களின் வாழ்வாதாரத்திற்கான போராட்டம்.

தொழிலாளி வர்க்கம் அசைந்தால் தான் அந்த அகிலம் அசையும். என்று பறை சாற்றுகின்ற வகையில் ஒன்றிய அரசின் எஜமானர்களுக்கு புரிய வைக்க 10 நிமிடம் நமது வாகனத்தை டிசம்பர் 10-ல் நண்பகல் 12.00 மணி முதல் 12.10 மணி வரை நிறுத்துவோம். மற்றவர்களையும் பங்கேற்க செய்வோம்.

**மக்கள் இயக்கமாக மாற்றுவோம்!**

# தொழிற் சங்கங்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தாமல் தன்னிச்சையாக 10 சதவீதம் போனஸ் அறிவித்ததை கண்டித்து மாநிலம் முழுவதும் மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

25.10.2021


















Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 09.11.2021

# தொழிற் சங்கங்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தாமல் தன்னிச்சையாக 10 சதவீதம் போனஸ் அறிவித்ததை கண்டித்து மாநிலம் முழுவதும் மின்வாரிய தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

**25.10.2021**










Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.